தன் செல்வம்.

V 7. No. 13 [illegible].3.1934

உ

M241, N28KN
N34.7.13
199163

KALANILAYAM　　தனிப்பிரதி விலை அணா 0-2-6.

# கலாநிலயம்

A Literary Weekly
வியாழன்தோறும் வெளிவரும்.

உள் நாடு—வருஷ சந்தா ரூ. 7 0 0
புற நாடு—வருஷ சந்தா ரூ. 9 0 0

காரியாலயம்:—
வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

Vol 7.]　　1934 ௵ மார்ச் ௴ 29௳　　[No. 13

பொருளடக்கம்.

1. தலையங்கம் (Leader) 193
2. அப்பர் (64 கலை-இதிகாசம்-கந்தன் சரிதை)
E. N. தணிகாசல முதலியார், B.A.B.L. 195
3. தமிழ்ப் பாடம்
வில்லிபாரதம்--கிருஷ்ணன் தூதுச் சருக்கம் 196
4. கம்பராமாயணம்—(நட்புப் படலம்)
T. N. சேஷாசலம் B.A.B.L. 199
5. நம்மாழ்வார் வைபவம்
(6-ம் பத்து, 4-ம், தசகம்)
K. இராஜகோபாலாச்சாரியார் B.A. B.L. 202
6. இரவொன்றிற் பல பிழைகள்
(அங்கம் 1. களம் 1.)
(Goldsmith's—She Stoops to Conquer) 203
7. மதுரைக் கோவை (பகற்குறிப்
பிழைப்பு, செறிப்பறி வுறுத்தல்)
S. வையாபுரிப் பிள்ளை, B.A.B.L. 205
8. சூளாமணி (நகரச் சருக்கம்) வித்துவான்
T. P. மீனாக்ஷிசுந்தரம் பிள்ளை, B.A B L. 206
9. வர்த்தமானம் 208

## கலாநிலயம்

### கல்சரும் கவிதையும் 2.

குழந்தைக்கும், அது வைத்துவிளையாடும் பதுமைக்கும்உள்ளவோர்உறவேபோன்றது கவிதைக்கும் அது கையாளும் உயரியவிடயங்களுக்கு முள்ளஉறவு என்பதை முன்னர்க் கூறிமுடித்தோம். இவ்வொற்றுமையை உணர்ந்தால், பகுத்தறிவிற்கும் மனோபாவத்திற்கும் இடைகிடக்கும் வேற்றுமையைத் தெரிந்து கொண்டதாகும்.

சித்திரப் பதுமையொன்றை நாம் பார்க்குங்கால் என்ன செய்கின்றோம்! "இது எதனாற் செய்தது—மண்ணோ, மரமோ, வெள்ளியோ, பொன்னோ? எவ்வூரிற் செய்தது—தஞ்சையோ, புதுவையோ, சீமையோ? வேலைத்திறம் நன்றாக அமைந்திருக்கின்றதோ? என்ன விலைபெறும்? இது வாங்கிப் பயனுண்டோ—அல்லது இவைகளை வாங்கிவிற்று இலாபம்சம்பாதிக்கலாமோ?" என்று இன்னவகையில் நமது எண்ணங்கள் தொடர்கின்றன. இவ் வெண்ணங்கள் அப் பதுமையை நோக்கியதால் பிறந்தன. பிறந்த அவ் வெண்ணங்களில் ஒவ்வொன்றும் மற்றவைகளோடு சம்பந்தப்படும். மட்பதுமையாயின் புதுவையிற் செய்திருந்தால் நல்லதென்றும், வெள்ளியாயின் தஞ்சைவேலை உயர்ந்ததென்றும், புதுவையிற்செய்த மண்பதுமைக் கின்னவிலை யென்றும், இப்படியே ஒன்றோடொன்று தொடர்புபடுத்தி நினைக்கின்றது நம் மனம் இப் பதுமையைப்பற்றி நமக்கு முன்னரே தெரிந்திருக்கின்ற தன்மைகளை இப்பொழுது கணக்கெண்ணிப் பார்க்கின்றோம். இப்பதுமைக்கு விலை எட்டணாவே கொடுக்கலாம் என்று நினைக்கும்போது, அது மண்ணாற்செய்தது என்னும் எண்ணமும் புதுவையிற்செய்யப்பட்டது என்ற எண்ணமும் ஆகிய இவ் விரண்டு எண்ணங்களுக்கும் உள்ள சம்பந்தத்தைப்பற்றிச் சிந்திக்கின்ற நிலையில் நம் மனம் அமையலாகின்றது. அமைந்து எட்டணாவிலை என்ற முடிவிற்குவருகின்றது. இம்முடிவே முற்றிய முடிவாக இருக்கவேண்டும் என்னும் அவசியமில்லை. அந்த முடிவும் ஒரு எண்ணத்தின் தன்மையதாய் இடைநின்று வேறுஎண்ணங்களோடு சம்பந்தப்பட்டு மற்றோர் முடிவிற்கும் இடந்தரலாம். "ஒன்றே வாங்கினால் எட்டணா விலை, ஒன்பது வாங்கினால் விலை குறையும். குறைந்த விலைக்கு வாங்குவது இலாபம்" என்றிப்படித் தொடர்ந்துகொண்டு போவதும் கூடும். இதுதான் மனத்தினது பகுத்தறிவு என்னும் பாகம்; இங்குப் பதுமையைப் பார்த்ததால் பிறந்த எண்ணங்கள் ஒவ்வொன்றும் மற்றஎண்ணங்களோடு சம்பந்தப்படுவதைக் காண்கின்றோமேயன்றி, நம்மனம் அவைகளோடு கலக்கவில்லையே. வருகின்ற முடிவிற்கு அவ்வெண்ணங்கள் தனித்தனி குறிகளாயிருக்கின்றன. இவ்வெண்ணங்களின் சேர்க்கையால் புதிய எண்ணம் ஒன்றும் அமையவில்லை. முன்னரே தெரிந்திருந்த சில குணங்களைத்தான் கூட்டியுங் கழித்தும் பெருக்கியும் வகுத்தும் கணக்கிட்டுப்பார்க்கின்றோம். இதனில்நம் மனத்தின் செயல் ஒன்றுமில்லை. எண்ணங்களின் சம்பந்தத்தால் எய்திய முடிவை ஏற்கின்ற நிலையிலிருக்கின்றது மனம், அவ்வளவே. பகுத்தறிவென்பதன் இலக்கணம் இது.

இனிப் பொம்மையொன்றைக் கைக்கொண்ட சிறு குழந்தையின் செய்தியைப் பார்ப்போம். இது மண்ணோ, மரமோ, பொன்னோ, வெள்ளியோ, எனப்

பொருளை வேறுவேறாகப் பிரிக்கப் புகுகின்றதில்லை. இது தஞ்சையிற் செய்ததோ புதுவையிற்செய்ததோ, என்று இடவேற்றுமையும், பழையதோ புதியதோ எனக் காலவேற்றுமையும் பாராட்டும் எண்ணங்கள் பிறப்பதில்லை. "இது வோர் பதுமை,—அழகியது—இதை ஒருபோதும் கையை விட்டுக் கீழே இறக்கப்படாது—இதனைக் கொணர்ந்து தந்த தந்தை நல்லவன்—இதனைத் தம்பிக்குக் காட்டவேண்டும்—" என்றிப்படிப்பட்ட எண்ணங்கள் அக்குழந்தை மனத்தில் பிறக்கின்றன. இவ்வெண்ணங்கள் தனித்தனியாகவே நிற்கும்போதும் அவைகளால் அக்குழந்தைக்கு ஒரு பயன் உண்டு. அதுதான் உவகை. மற்று அவைகள் ஒன்றோடொன்று சேரும்போதும், முன்னைய உதாரணத்தில் காட்டியதுபோல் முடிவு என்பது நேர்வதில்லை—அப்பொழுதும் உவகை என்னும் பயனே. இக்குழந்தைமனம் அப்பொம்மையின் தன்மையைப் பற்றித் தனக்குத் தெரிந்திருப்பனவற்றையெல்லாம் இப்பொழுது கணக்கிடப் புகுவதில்லை. பிறந்த ஒவ்வோர் எண்ணத்திற்கும் இடையே உள்ள சம்பந்தம் என்னவென்று ஆராய்வதில்லை. இது பதுமை என்ற எண்ணம் பிறந்தவுடன் அதுவரையிலே தனக்கு ஓர் உவகை உண்டாவதை உணர்கின்றது. தம்பிக்குக் காட்டவேண்டும் என்ற எண்ணந் தோன்றியவுடன் உவகை உண்டாவதை உணர்கின்றது. தன் தந்தை நல்லவன் என்றஎண்ணம் உண்டானவுடனும் தனக்கு உவகை உண்டாவதை உணர்கின்றது. இவ்வுவகை இருக்க, குழந்தையானது அப் பொம்மையைப் பற்றிய தன்மைகளைத் தொடர்ந்த எண்ணங்களோடு நின்றுவிடுவதில்லை. மிகமிகவிரைவில் தன் மனத்தைக்கொண்டுபோய் அவ்வெண்ணங்களோடு கலந்துவிடுகின்றது. தன்னுடைய அன்னை தனக்குப் பாலூட்டிச்சீராட்டித் தாலாட்டிப் பாராட்டியபோதெல்லாம் அந்தக் குழந்தை ஒருவித இன்ப உணர்ச்சியை அறியப்பெற்றிருக்கின்றது. ஆதலின் அக்குழந்தை மனம் அன்னையின் அன்பினால் ஒருவித உணர்ச்சிக்கு ஆளாகின்ற வண்ணத்தது. இவ்வண்ணத்தைக்கொண்டுபோய் அவ்வெண்ணங்களோடு, அக் குழந்தையின் மனோபாவம் கலந்துவைக்கும். இந்தக் கலவையால் வேறு பல எண்ணங்கள் உடனேநேர்வதாகும். "இப்பொம்மைக்குப் பாலூட்டவேண்டும், அதனைத் தொட்டிலிலிட்டுத் தாலாட்டவேண்டும். அதன்மேல் காற்றடிக்கப்படாது, தூங்கவைக்கவேண்டும், ஒருவரும் இரையப்படாது" என்பனபோன்ற எண்ணங்கள் இந்தக்குழந்தையின் மனத்தின்கண் தோன்றலாகின்றன. தோன்றி, அந்தப் பொம்மைக்கு முற்றாத தனது முலையைக்கொடுக்கும், முதிராத தன் குதலையால் தாலாட்டும், காகிதத்தை எடுத்துப் போர்த்தும், பேசுவோர் வாயெல்லாம் தன் தளிர்க்கரங்களால் பொத்திப்பொத்தி ஒலியை அடக்கும். இது மனோபாவம்.

இவ்வாறுசெய்கின்ற ஒருகுழந்தையின்செய்தியை நுணுகி ஆராயுங்காலையில் ஒன்று தென்படும். இப்பொம்மையின் குணகுணங்களைப் பற்றிய எண்ணம் ஒன்றேனும் இப்போது அதனிடத்தில் இல்லை. தான் பாலூட்டிச் சீராட்டும் அது பொம்மை என்னும் ஒரு உருவமாக இருக்கவேண்டுமென்பதும் மிகையே. எவ்வித உருவமுமற்ற மரக்கட்டையாயிருந்தாலும் போதும். சிறுமணை தலையணை முதலியவைகளுங்கூட அதன் பாராட்டலுக்குப் பாத்திரமாகின்றன. உருவம் அற்றவோர் மரத்துண்டை வைத்துக்கொண்டு, தன் வெறுங்கையே சங்காகப் பால்போட்டும். கட்டைக்கு இல்லாதஉருவமும்வாயும், தன்கையிலில்லாத சங்கும்பாலும் எல்லாம் அக்குழந்தையின் மனோபாவம் பூர்த்திசெய்து வைக்கின்றது. புள்ளாங்குழலினிற்குள் புக்க காற்று அக்காற்றிற்கேற்றவெறும்சுவரமாகவே வெளிவருவதுபோல், இக்குழந்தையுள் புகுந்த எண்ணம் அவ்வெண்ணத்திற்கேற்ற எண்ணங்களாக மாத்திரம் வருவதில்லை. பொம்மையைப் பார்த்த நம் மனத்திற்குள், 'அதுமண்' 'புதுச்சேரியில் செய்தது' ஆனையஎண்ணங்கள் செல்ல, பின் அவ்வெண்ணங்களின் தொடர்ச்சிக்கு ஏற்றபடியேமீண்டும் 'எட்டணு விலை' என்று அவை வெளிவருகின்றன. புள்ளாங்குழலை வாசிப்பவன் தான் ஊதுங் காற்றோடு தன்னுடைய உணர்ச்சியையுங் கலப்பானுயின் அக்காற்று வெறும் சுவரங்களாய்நில்லாமல் கீதமாகிக் கமகத்துடன் வருகின்றது. புள்ளாங்குழலை வாசிப்பவன் ஊதிய காற்றை எப்படி ஆள்கின்றானோ, அவ்விதமே எண்ணங்களை மனோபாவம் ஆள்கின்றது. புள்ளாங்குழற் புல்வன், "இப்பொழுது ஸா சுவரம் பிறந்தது, இப்பொழுது ரீ சுவரம் பிறந்தது, இப்பொழுது கா சுவரம் பிறந்தது, இப்பொழுது பா சுவரம் பிறந்தது, இப்பொழுது தா சுவரம் பிறந்தது," என்று சுவரங்களைத் தனித்துத் தனித்து இயக்குவதில்லை. இப்படிப் பிறந்ததால் இதன் முடிவு மோகனராகம் என்றெண்ணுவதில்லை. இந்தச்சுவரங்கள் தனித்தனிச் சுத்தமாயமைவதாலே சுகம் என்னும் பயன் ஏற்படுகின்றதா; இவைகளைச் சேர்க்கும்படி சேர்ப்பதால் விளைகின்ற மோகன இராகமென்னும் இன்பமாகிய பயன் எய்துகின்றதா, என்பதே அவனுடைய உணர்ச்சியின்நிலை. இக்கீதமானது சுவரங்களின் சேர்க்கையால் ஆனதுதான். ஆயினும் சுவரங்கள் மாத்திரமல்லாமல் அதனைச் சேர்த்தவனாகிய புலவனுங் கலந்திருக்கின்றான். மனோபாவம் என்னும் அது புரியும்தொழில் இப்புலவன் போன்றதே. ஏற்பட்ட எண்ணங்களைப் பல்வேறுவகையில் ஒழுங்குபடுத்தி அதனுடன் தானுங் கலந்துகொண்டு அவ்வெண்ணங்களின் சேர்க்கையால் வேறுபிற எண்ணங்களும், அவைகளுக்கு ஒரு பயனும் உண்டாகுமாறு மனோபாவம் செய்கின்றது. பகுத்தறிவு, எண்ணங்களின் சம்பந்தத்தைமட்டுங் குறித்து அச்சம்பந்தத்தால் கணிதநூல் முறைப்படி எய்தவல்ல முடிவினில் நம்மைக்கொண்டு சேர்க்கும். மனோபாவம் அவ்வெண்ணங்களைத் தன்னுடைய தன்மையனவாக்கி அவைகளால்வரும்பயனைத்தான் ஆதரிக்கும். எண்ணங்களுக்குக் காரணமாயிருந்தபொருள் அல்லதுவிஷயத்தைப் பகுத்தறிவு முக்கியமாகக்கொண்டு அதனையே பற்றியிருக்கும். மனோபாவம் அப்பொருளால்பிறந்த எண்ணங்களிலிருந்துவிளைந்த பிறஎண்ணங்களின் உணர்ச்சியைப்பற்றிக்கொண்டு அப்பொருளைப்புறக்கணித்துவிடும் தன்மையது.

சென்றவாரம் நாம் சுருங்கக்கூறிக்குறித்த சிலவிஷயங்களையே இங்குச் சிறிது விரித்துரைக்கலாயினோம். பின் இனி, கவிதையின் வாய்மை இன்னதென்றும், கல்சர்நிலை எய்துவிப்பதற்குக் கவிதை எவ்விதத்தில் உதவுகின்றதென்பதையும்பற்றி இனிச் சொல்லுதற்கிருப்பவைகளை உய்த்து [illegible] மனோபாவ

199163



பகுத்தறிவு என்னும் இவைகளின் இலக்கணம் தெள்ளிதின் தேர்ந்திருத்தல் இன்றியமையாதது. ஆதலின் இவை சிந்தனையில் அமர்ந்திருத்தல் வேண்டும். ஒவ்வொருவர் இடத்தும் ஓரளவு பகுத்தறிவும் ஓரளவு மனோபாவமும் இருக்கின்றன—எப்பாகம் அதிகம் என்பதிலேயே வேற்றுமை தோன்றுகிறது. அவரவர் தமது எண்ணங்களை எடுத்து ஆய்ந்து, எவையெவை பகுத்தறிவின்பாற் பட்டனவென்றும், எவையெவை மனோபாவத்தால் இயங்குவன என்றும் சோதித்துச் சிறிது பயிற்சிசெய்தல் நலம்.

# அப்பர்

## அப்பரும் அறுபத்து நான்கு கலைகளும்.—31. இதிகாசம்

[189-வது பக்கத் தொடர்ச்சி]

சிவபெருமான் பாகத் தமர்ந்திருக்கின்றாளாயினும் மலைமகள் என்றும் மாறாதகன்னியே என்பதைத் திருநாவுக்கரசர் மிகவும் அழகாகக் காட்டுகிறார்:—

வன்னிவா ளரவு மத்தம் மதியமு மாறுஞ் சூடி
மின்னியவுருவாஞ்சோதிமெய்ப்பொருட்பயனுமாகி
கன்னியோர் பாக மாகிக் கருதுவார் கருத்து மாகி
இன்னிசைதொண்டர்பாடவிருந்தவாப்பாடியாரே.

—திருவாப்பாடி - திரு நேரிசை - 6.

எனவே,சிவபிரான்"கன்னியை"ப்பாகம்பெற்றமாட்சியே கந்தர் திருவவதார மாட்சியாம். இக்கருத்துப் பொருந்த "நங் கடம்பனைப் பெற்றவள் பங்கினன்" என்று பின்னேரிடத்தில்அப்பர்குறிப்பிடுவது காண்க-காமனை யெரித்த கடவுள் திருமணத்தன்றே காமனை மீளவும் வருவித்தார் - இரதியின் வேண்டுகோளுக்கிணங்கி அவ்வாறு செய்தாரென்று புராணங்கள் கூறினும், மன்மதன் பணிந்து மன்னிப்புக் கேட்டதற்கு, சிவபெருமான் தந்த விடையை நோக்குவோமாயின், இரதி வேண்டாவிடினும் மாரனை முன்போலவே அவர் தோற்றுவித்திருப்பாரென்பது திண்ணம்:—

முன்பொடு தோன்று மாரன்
முதல்வியோ டிருந்த நாதன்
பொன்புனை கமலத் தாண்முன்
போந்தனன் றாழ்ந்து போற்றி
"யென்பிழை பொறுத்தி" யென்ன
"யாமுனை முனியி னன்றோ
பின்பது தணிவ துள்ளம்?
பேதுறன் மைந்த;" வென்றான்.

—கந்தபுராணம் - திருக்கலியாணப் படலம் -

உலகத்தின் விருத்திக்காகத் தக்க கன்னிகையுடன் திருமணம் வேட்டல் இன்றியமையாதது. ஏனெனில் தேவதத்துவத்தின் மேலான சிவதத்துவ விருத்திக்கே உமாதேவியார் திருமணம் வேண்டப்பட்டதென்னில் உலகம் நிலைகுலையாமலும், கலைகவின்ற பொருள்கள் கலங்காமலும் இருப்பதற்கு, இவ்வழியே இயற்கை வழியாமென்பதைக் கந்தபுராணம் குறிப்பிடுகின்றது:-

மும்மையி னுயிர்கள் பெற்ற
முகிழ்முலைக் கன்னி யாகு
மம்மையை மணந்த தன்மை
யாங்கவ ளிடமா வீங்கோர்
செம்மலை யளித்தற் கன்றே
தீவினை கடற்பட் டுள்ள
வெம்மையா ளுவதற் கேது
காட்டிய வியற்கை யல்லால்

—கந்தபுராணம் - திருவவதாரப்படலம் - 41.

சிவபெருமானைக் குறித்துச் சிறப்பித்துக் கூறும் நம் சமயகுரவர் நால்வரும் அவனைப் பார்வதிசமேதனென்று பாடுகின்றனர். "உருவார்ந்தமெல்லியலோர்பாகமுடையீர்" என்று சம்பந்தர் முதலானோர் பாடுவது போல, வைணவ சமயத்திலும் பெரிய பிராட்டி சமேதனாகத் திருமாலை ஆழ்வாராதிகளும் துதிசெய்வது சிறப்பு வழிபாடாகக் காணலாம். தாயின்றித் தந்தையைத் தனித்து வழிபடல் அத்துணைச் சிறப்பன்று.

பூங்கமலத் தயனொடுமா லறியாத நெறியானே
கோங்கலர்சேர்குவிமுலையாள்கூறுவெண்ணீறாடீ
ஓங்கெயில்சூழ்திருவாரூருடையானேயடியேனின்
பூங்கழல்களவையல்லாதெவையாதும்புகழேனே

—திருவாசகம் - திருப்புலம்பல் - 1.

என்னும் மணிவாசகம் நோக்குக. திருநாவுக்கரசும்

"நீறிட்ட நுதலர் வேலை நீலஞ்சேர் கண்டர் மாதர்
கூறிட்ட மெய்ய ராகிக் கூறினா ராறும் நான்கும்"

—திருவதிகை வீரட்டானம் - திருநேரிசை -7.

என்பதில் மாதராகிய பார்வதிதேவியாருக்குச் சமபாகந் தந்த மெய்யாராகிச் சிவபெருமான் நாலும்ஆறும் கூறினாரென்பதால், அன்னவாறு கூடாவிடில் அது நேராதென்று அநுமானிக்க இடந்தருகின்றது. யோகிகள் சிந்திப்பதுபோல் நாம் சிவனை அருவமாகச் சிந்திப்பது அரிதாதலால் சகுணோபாசனையில் உமாபதியாகச் சிந்தித்தல் திருவின் மிக்க திருவைத் தரும்:—

அருவ னுயத்தி யீருரி போர்த்துமை
உருவ னுயொற்றி யூர்பதி யாகிலும்
பருவ ரால்வயல் சூழ்ந்த பழனத்தான்
திருவி னுற்றிரு வேண்டுமித் தேவர்க்கே.

—திருப்பழனம் - திருக்குறுந்தொகை - 1.

என்பு மாமையும் பூண்டங் குழிதர்வர்க்
கன்பு மாயிடும் ஆயிழை யீரினிச்
செம்பொன் பள்ளியுளான் சிவலோகனை
நம்பொன் பள்ளியுள் கவினை நாசமே.

—திருச்செம்பொன் பள்ளி - திருக்குறுந்தொகை 2

இவற்றை நோக்குழி, முத்திபெறுவதற்குத்தக்க வாழ்க்கைத்துணைவி யிருப்பின் இல்லறமே துறவறத்தினும் மேம்பாடுடையதாகும்.

இத்தகையஇல்லறத்தில் உதிக்கும்மதலையேஉலகிற்குப் பயன்படும். மகப்பேறுடன் மற்றஎல்லாச் செல்வங்களையும் பெற்றிருப்பினும் தக்க ஒழுக்கமின்றேல் அவை நிலைத்திரா. இதற்குத் தக்கன் சரிதை உதாரணமாகும். "நன்னெறி நின்றியென்னி னிலைக்குமிச் சீரெனா, மன்றுள் ஆடிய வானவன் போயினான்" என்னும் கச்சியப்ப சிவாசாரியர் கூற்றைக் காண்க.

சூரபன்மனுக்கு முன்னர்த் தவஞ்செய்து பெற்ற தன் அரிய வரப்பிரசாத பலன்களைத் தனது துன்மார்க்கத்தால் அழித்துக்கொண்டவன் தக்கனாகும்:—

பண்டோர் நாளிகழ் வான்பழித் தக்கனர்
கொண்ட வேள்விக் குமண்டை யதுகெட
தண்ட மாவிதா தாவின் தலைகொண்ட
செண்டர் போல்திரு நாகேச் சரவரே.
—திருநாகேச்வரம் - திருக்குறுந்தொகை - 5.

என்னும் அப்பர் பாசுரத்தை நோக்குக. மற்றும்—

தண்ட வாளியைத் தக்கன்றன் வேள்வியைச்
செண்ட தாடிய தேவர கண்டனைக்
கண்டு கண்டிவள் காதலித் தின்பதாய்க்
கொண்டி யாயின வாறென்றன் கோதையே.
—திருவாரூர் - திருக்குறுந்தொகை - 7.

தக்கன் சாபத்தால் கலைகள் தேய்ந்த * சந்திரனைப் பரமசிவன் தனது சடையில் தரித்து வளரச் செய்தாரென்று தன்னிலைமை யுணராது தக்கன் சிவத்துரோகமானவேள்விசெய்தது, அப்பெரும் வரப்பிரசாதியின் புன்மையைக் காட்டும்.

தக்கன், சூரபன்மன் முதலாயினோர் தமதுமனதில் வேரூன்றிய குற்றமொன்றால் நசித்தாராயினும், ஏனைய விஷயங்களில் அவர் நற்குணங்களும் பொருந்தியாவராலும் வியக்கத்தக்கவர்களா யிருந்தனர். அவர் மனைவிமார்களோ மகா பதிவிரதைகளாகக் காணப் படுகின்றனர். தாருகன் மரித்தவுடன் அவனது மனைவி சவுரியென்பாள் அக்கினியில் பிரவேசித்தாள். சூரபன்மன் இறந்த சங்கதியைக் கேட்ட பதுமகோமளை அக்கணமே உயிர்நீத்தனள். இவற்றை நோக்குங்கால் இப் பதிவிரதா சிரோமணிகளின் புருடர்களின் குணங்களில் தோஷமிருப்பினும், இவர் இல்வாழ்க்கையினும் மிக்க நல்வாழ்க்கை காணப்படவில்லை.

கந்தன் சரிதை இவ்வாறு தக்கன் சரிதையாலும் சூரபன்மன் சரிதையாலும் பல நீதிகளைப் போதிப்பதுடன் மற்றுமுள்ள கிளைக்கதைகளால் சிவபக்தியின் சிறப்பை எடுத்துக் காட்டும் - மார்க்கண்டேயர் பிறப்பும் அவர் சரிதையும் பற்றிய செய்திகளை அப்பர்தேவாரத்தில் நூற்றுக்கணக்கான செய்யுட்களில் காணலாம்.

கூற்றினை யுதைத்த பாதக் குழகனை மழலை வெள்ளே
றேற்றனை யிமையோரேத்தவிருசடைக்கற்றைதன்மேல்
ஆற்றனை யடிய ரேத்து மமுதினை யமுத யோக
நீற்றனை நினைந்த நெஞ்சம் நேர்பட நினைந்த வாறே
—நினைந்த திருநேரிசை 5.

கண்டந் தான்கறுத் தான்கால னாருயிர்
பண்டு கால்கொடு பாய்ந்த பரமனார்
அண்டத் தோங்குமண் ணாமலை கைதொழ
விண்டு போகுநம் மேலை வினைகளே
—திருவண்ணாமலை - திருக்குறுந்தொகை. 8.

சிவபெருமான் திருவடியைப் பற்றினால் நம்மைக் காலபாசம் யாதும் செய்யாது.

* தேய்ந்த திங்கள் கமழ்சடை யன்கனல்
ஏந்தி யெல்லியு ளாடு மிறைவனார்
காய்ந்து காமனை நோக்கின கண்ணினார்
ஆய்ந்த நான்மறை யோதுமா ரூரரே.
—திருவாரூர் - திருக்குறுந்தோகை - 8.

# தமிழ்ப்பாடம் 113.

## வில்லிபாரதம்—உத்தியோக பருவம்.

[180-வது பக்கத் தொடர்ச்சி]

### கிருஷ்ணன் தூதுச் சருக்கம்.

தங்கள் உரிமையைத் துறந்து இரவலர்போல் யாசித்து ஐந்தூர்பெற்று வாழ்தலுக்குத் தருமனுடன் சகாதேவனும் இசைவதாகச் சொன்னதுடன், கபடன் கண்ணனும் 'ஓம்' என்று சாற்றலும், மனம் பொங்கி, 'மாசுற்ற வென் கூந்தல் என்று முடிப்பேன்' என்று கண்ணன்பால்முறையிட்டுத்திரௌபதைகதறியதைக் கண்டோம். அவள்கதறலுக்கும் கண்ணன் காதுகொடாதிருந்ததுகண்டு மனம்பொறாத சாத்தகி பாண்டவர்களையும், தன் தமையனையும் பின்வரும் இரண்டுபாசுரங்களால் கடிகின்றான்.

———

தண்டிருந்த திவன்கரத்தில்
தனுவிருந்த தவன்கரத்தில்
வண்டிருந்த பூங்குழன்மேன்
மாசிருந்த தெனவிருந்தாள்
கண்டிருந்தீ ரெல்லீரும்
கருதலர்பா லூர்வேண்டி
யுண்டிருந்து வாழ்வதற்கே
யுரைக்கின்றீ ருரையீரே. 34.

பதவுரை.

(திரௌபதியை இராஜ சபைக்கு அழைத்துவந்து துச்சாதனன் துகிலுரிந்த அந்நாள்), இவன் கரத்தில்-பீமசேனனது கையில், தண்டு - கதை, இருந்தது - இருக்கவில்லையோ! அவன் கரத்தில் - அர்ச்சுனன் கையில், தனு-வில், இருந்தது - இருக்கவில்லையோ! (கதையும் வில்லும் இருந்தும்) வண்டு இருந்த-வண்டுகள் விரும்பித் தங்குவதற்கு இடமாய் அமைந்த, பூ-அழகிய,குழல்மேல்-திரௌபதியின் கூந்தலின்மேல், மாசு - (துச்சாதனன் பற்றியிழுத்ததால் ஏற்பட்ட) பழுது, இருந்தது-நீங்காது இருந்தது, என - என்று எல்லோரும் சொல்லும்படி, இருந்தாள்-திரௌபதி அப் பழிக்கு ஆளாகி இருந்தாள். எல்லீரும் - பாண்டவர்களாகிய நீங்கள் எல்லீரும், கண்டு இருந்தீர்-அதனைப் பார்த்துக்கொண்டு இருந்தீர்கள்.

(இனியும்) கருது அலர் பால் - உங்களை மதிக்காதவர்களிடத்தில், ஊர் வேண்டி - ஐந்து ஊர்களை யாசித்துப் பெற்று, உண்டு இருந்து - (வெட்கமில்லாமல்) வயிறு வளர்த்து, வாழ்வதற்கே-உயிர்வாழ்ந்து இருப்பதற்கே, உரைக்கின்றீர் - உரைக்கின்றவர்களாகிய பாண்டவர்களே, உரையீர் - (இது முறையா) சொல்லுங்கள் (என்றான் சாத்தகி).

விரிவுரை:—கிருஷ்ணனுடைய தந்தையாய வசுதேவனுக்கும் சத்யகைக்கும் பிறந்த முறையால் சாத்தகி கிருஷ்ணனுக்குத் தம்பியாவான்.

உடன்பிறந்தோர் என்பதையும் நினையாது பாண்டவர்க்குப்பல இடுக்கண்புரிந்தும்,பெண்ணென்றும் பாராதுதிரௌபதியைமானபங்கம்செய்தும்,வனவாசம் செய்து திரும்பியவர்க்குஅவர்க்குரியபாகத்தைக்கொடுக்கமறுத்தும் நிற்குமிக் கொடியோனைப்போரில் தண்டித்துத் தம் நாட்டினை மீண்டுமடைய முயலாது கோழைகள்போல் பேசுவதுக்கண்டு ஆற்றாது, இந்தவுரை



வழங்கினான் சாத்தகி. வழங்கிய இவ்வுரை தருமனது மனத்தில் கிளர்ச்சியொன்றும் விளைவிக்கவில்லை. பின் கண்ணனைப் பார்த்தான். அவ் வேஷதாரியினுடைய வாய்ப்பூட்டிற்கும் திறவுகோலாய்த் தன்னுரை அமையாது போகவே, மனதிற் சினம் மூள இன்னும் சிறிது கடுமையுடன் அவன் உரை பிறக்கலாவதை அடுத்த செய்யுளில் காணலாம்.

குறிப்பு:—இந்தச் செய்யுளில் இருந்தது என்னும் சொல், பலமுறை ஓரேபொருளில் வந்திருப்பது, சொல்பொருள் பின்வருநிலை அணியாகும். இதன் இலக்கணத்தை முன் "போர்முடித்தான் அமர்பொருது" என்று தொடங்குகின்றசெய்யுளின்கீழ்(வால்யூம் 7, பக்கம் 101) உரைத்திருக்கக் காணலாம்.

———

சண்டமுகி லுருமனைய சராசந்தன் றனக்கஞ்சி
வண்டுவரை யரணாக வடமதுரை கைவிட்ட
திண்டிறன்மா தவன்மதியோ திகழ்தருமன் றன்மதியோ
பண்டுமவர் கருத்தறிந்து பார்போய்வேண் டுவதென்றான்.

பதவுரை.

(தனது உரையைத் தொடர்ந்து சாத்தகி), அவர்-துரியோதனாதியர்களுடைய, கருத்து-எண்ணத்தை, அறிந்து - அறிந்தபின்னும், பண்டும் - மறுபடியும், போய்-அவர்களிடம் சென்று, பார் - இராஜ்யத்தை, வேண்டுவது - யாசிக்கின்ற இது,

சண்ட - பெரிய, முகில் - மேகம், உரும் - இடிக்கின்ற இடியை, அனைய-ஒத்த (அச்சமுறுத்துவானான) சராசந்தன் தனக்கு - சராசந்தனுக்கு, அஞ்சி - பயந்து, வள் - வளப்பமுடைய, துவரை - துவாரகாபதியை, அரண் ஆக-தனக்குக் காப்பாக அமைத்துக்கொண்டு, வட மதுரை-வட மதுரையை, கைவிட்ட-விட்டுவிட்டு ஓடின, திண் - வலிமைபொருந்திய, திறல் - பராக்கிரமம் உடைய, மாதவன் - கிருஷ்ணனது, மதியோ - புத்தியோ! (அல்லது) திகழ் - விளங்குகின்ற, தருமன் தன்-தருமராஜனுடைய, மதியோ - புத்திதானோ, என்றான்-என்று பரிகாசமொழி கூறினான்.

விரிவுரை:—பிருகத்திரதன் என்பவனுக்குக் கௌசிக முனிவர் அளித்த மாங்கனியொன்றை அவன் பட்டமகிஷியிடம் கொடுக்க, அதனை அவள் தன் சக்களத்தியோடு பகிர்ந்து உண்ணவும், இருவரும் கருப்பம் உற்று ஒரு பிள்ளையின் பாதிப்பாதி பாகத்தைத் தனித்தனிப்பெற்றனர். அப்பொழுது ஜரைஎன்னும் பெயருடைய அரக்கியொருத்தி மாயத்தால் அவ்விரு பாதிகளையும் கவர்ந்து சென்று ஒன்றாய்ச் சேர்த்துப் பிருகத்திரதனிடம் கொடுத்தனள். ஜரை என்பவளால் இவ்விதம் சந்திசெய்யப்பட்டதால் அவனுக்கு ஜராசந்தன் என்னும் காரணப்பெயர்வந்தது. இச்சராசந்தன், தன் மருகனான கம்ஸனைக்கொன்ற கண்ணன் மீது மிக்க கோபங்கொண்டு படையெடுத்துச்சென்று அவனை வடமதுரையிலிருந்து துவாரகைக்குத் துரத்தியகதை இங்குக்குறிக்கப்பட்டிருக்கிறது. பிறகுபாண்டவர்செய்த ராஜஸூய யாகத்தில் கிருஷ்ணனை இகழ்ந்து பேசியதற்காகப் பீமசேனன் அவனைப் பொருதுகொன்றனன். அந்தத் தனிப்போரில் வீமன் எத்தனை முறை அவனைக் கிழித்தெறிந்தாலும், மீண்டும் மீண்டும் அவ்வங்கங்கள் ஒட்டிக்கொண்டதால் சலிப்படைந்து திகைத்தபோது, அருகிருந்த கண்ணபிரான் ஒரு துரும்பை யெடுத்து இரண்டாகக் கிள்ளி அவைகளை மேலும் கீழுமாகவைத்துக் காட்டினான் என்றும், இக்குறிப்பை வீமன் கண்டுகொண்டு மறுமுறை சராசந்தனைக் கிழித்தவுடன் அத்துண்டுகளை மேலும்கீழுமாக மாற்றிப் பொருத்தவே, அவை அன்னபடியே ஒட்டிக் கொள்ளச் சராசந்தன் செயலற்று ஒழிந்தனன் என்றும், சொல்வர்.

திண்திறல் மாதவன்என்று கண்ணனுக்கு, திகழ் தருமன் என்று தருமனுக்கும் அடைமொழி கொடுத்து, வஞ்சப்புகழ்ச்சியாய்ச் சாத்தகி இயம்பிய இவை சினத்துடன் கலந்த பரிகாசமொழிகள் ஆகும் என்பது வெளிப்படை.

———

தொல்லாண்மைப்பாண்டவர்க்குத்தூதுபோய்மீண்ட
னல்லாயுன் பைங்கூந்த லானே முடிக்கின்றே [தற்பி
னெல்லாருங் காணவினி விரிப்ப தெண்ணரிய
புல்லார்த மந்தப்புர மாதர் பூங்குழலே. 36.

சாத்தகி இவ்வண்ணம் உரை வழங்கவும், அதனைக் கேட்ட கண்ணபிரான், தன்னயலில் அழுது நிற்கும் திரௌபதியை அருளுடன்பார்த்து அவளுக்குத் தேற்றமொழி கூறுவான்.

பதவுரை.

தொல் ஆண்மை - பழைமையான நெறியில் வழுவாத பராக்ரமம் உடைய, பாண்டவர்க்கு - பாண்டவர்களுக்காக, தூதுபோய் - தூதாகப்போய், மீண்டதன் பின் - திரும்பிய பிறகு, நல்லாய் - பெண்ணே, உன் - உனது, பை - பசுமையான, கூந்தல் - கூந்தலை, நான் ஏ-நானே, முடிக்கின்றேன் - முடித்துவைக்கின்றேன்.

எண் அரிய - கணக்கிலடங்காத, புல்லார் தம் - அற்பர்களாகிய துரியோதனாதியர், அந்தப்புரம் மாதர் - அந்தப்புரத்தில் இருக்கும் மாதர்களுடைய, பூங்குழலே - அழகிய கூந்தலே, இனி - இனிமேல், எல்லாரும் காண - எல்லாரும் காணும்படி, விரிப்பது - விரித்திருப்பது ஆகும், (என்றான் கண்ணபிரான்)

———

## இலக்கணம்

B. இரண்டாம் வேற்றுமை.

கரடியைப் பிடித்தான், கரடி பிடித்தான், கரடிப் பொறி, என்னும் இம்மூன்று வாக்கியங்களிலும் நிலைமொழியாகிய கரடி என்பது இரண்டாம் வேற்றுமையிலிருக்கின்றது. ஆயினும், முதல்வாக்கியத்தில்இரண்டாம்வேற்றுமை உருபாகிய ஐ என்பது விரிந்திருப்பதால், அத்தொடர் இரண்டாம்வேற்றுமைத் தொகாநிலைத்தொடர் ஆகும். மற்ற இரண்டு வாக்கியங்களிலும் ஐஎன்னும்உருபு தொக்கு இருக்கின்றது. ஆகையால் அவை தொகைநிலைத்தொடர். எனினும், கரடி பிடித்தான், என்பது கரடியைப் பிடித்தான்என உருபு மாத்திரம் விரிந்த அளவில் பொருள்படு மாகையால், அதனை இரண்டாம்வேற்றுமைத் தொகையென்றும், மற்றது, கரடியைப் பிடிக்கும் பொறி என உருபோடு வேறொரு சொல்லும் விரியவேண்டியிருப்பதால் உருபும்பயனும் உடன்தொக்க தொகை என்றும் ஆகும். இவைகளின் இலக்கணம் முன்னரே(5வது வால்யூம், 686, 703,வது பக்கங்கள், 6வது வால்யூம், 343, பக்கம்) விரிவாக உரைக்கப்பட் டிருக்கின்றது.

நிலைமொழி இரண்டாம் வேற்றுமைச் சொல்லாக இருக்க வருமொழிமுதல் வல்லினமெய் வந்து புணர்கின்ற விதிகளைப் பார்ப்போம்.

I. நிலைமொழி இயற்கையில் எந்தஈற்றுச் சொல்லாயிருப்பினும் அது இரண்டாம் வேற்றுமை ஐ என்னும் உருபோடு சேர்ந்து இருக்குமானல் வருமொழி முதலிலுள்ள வல்லினமெய் மிகுந்தே புணரும்.

எருதை + கட்டினன் = எருதைக் கட்டினன்
புலியை + துரத்தினன் = புலியைத்துரத்தினன்
காட்டை + சேர்ந்தான் = காட்டைச்சேர்ந்தான்
பாயை = பிய்த்தான் = பாயைப்பிய்த்தான்
ஊரை + காட்டினன் = ஊரைக்காட்டினன்
புகழை + பெற்றுன் = புகழைப்பெற்றுன்
இராமனை + பார்த்தான் = இராமனைப்பார்த்தான்
மரத்தை + குடைந்தான் = மரத்தைக்குடைந்தான்
காலை + பிடித்தான் = காலைப்பிடித்தான்.

குறிப்பு:—எருது, புலி, காடி, என்பன உயிரீற்றுச் சொற்கள். பாய், ஊர், புகழ் என்பன உயிரீறுபோல் புணர்ச்சிவிதிபெறுகின்ற யகர ரகர ழகர மெய்களை ஈற்றிலுடைய சொற்கள் (7வது வால். 133வது பக்கம்.) மரம், கால், இராமன் என்பன வேறுமெய்களை ஈற்றிலுடைய சொற்கள். எனினும் இவையனைத்தும் ஐ உருபு ஏற்றவுடன் வருமொழி வல்லினம் மிகுகின்றதைக் காணலாம்.

முதலை, ஆமை, தலை, மதலை, யானை, பனை, என்பன போல் ஐ என்னும் உயிரில் முடிகின்ற முதல் வேற்றுமைச் சொற்களை இரண்டாம்வேற்றுமை விரியென்று எண்ணலாகாது. ஆதலால் மதலை பிறந்தான், பூனை கடிக்கும், தலைசாய்ந்தது, ஆமை தூங்கும், எனவரும் இவைபோன்றன எழுவாய்த்தொடர்களாதலால் வல்லினம் மிகாது.

II. உயிர் அல்லதுயகர ரகர ழகர மெய்களை, ஈற்றிலுடைய நிலைமொழி இரண்டாம் வேற்றுமைத் தொகையாயின், வருமொழி முதலில் வரும் வல்லினம் மிகாது என்று பொதுவாகக் கூறலாம்.

எருது + பிடித்தான் = எருதுபிடித்தான்.
உரை + செப்பினன் = உரைசெப்பினன்.
காடு + சேர்ந்தான் = காடுசேர்ந்தான்.
ஊசி + திருடினன் = ஊசிதிருடினன்.
காய் + தின்றான் = காய்தின்றான்.
ஊர் + கண்டான = ஊர்கண்டான்.
அகழ் + தோண்டினன் = அகழ்தோண்டினன்.

குறிப்பு:—மலைகண்டான், பூனைபிடித்தான், விலைகொடுத்தான், மதலைபெற்றுள், என்றவருவனபோன்ற தொடர்களிலும், நிலைமொழி இரண்டாம்வேற்றுமைத்தொகையே யாகையால், வல்லின மெய் மிகாது. இவை விரிந்தால், மலையைக் கண்டான், பூனையைப் பிடித்தான், விலையைக்கொடுத்தான், மதலையைப்பெற்றுள் என ஆகும்.

இரண்டாம்வேற்றுமைத் தொகைநிலைத்தொடரில் வல்லினம் மிகாது என்று முன் கூறியது பொதுவிதி. இதற்கு மாறாக மிகுகின்ற இடங்களும் இருக்கின்றன:—

1. சிலசமயம், ஒருதொடர் எழுவாய்த்தொடரோ, அல்லது இரண்டாம் வேற்றுமைத் தொகைநிலைத்தொடரோ என்று மயக்கம்விளைவிக்கு நிற்கும்படி அமையக்கூடும். உதாரணமாக, 'புலி கொன்றயானை' என நிற்குமாயின், அவ்வாக்கியம், புலியானையைக்கொன்றதென்றும், யானைபுலியைக்கொன்றதென்றும் உணர்த்தலாம். முன்னதை உணர்த்துமாயின் அது எழுவாய்த் தொடர்; புலியைக்கொன்றயானை எனப் பின்னதை உணர்த்துமாயின் அது இரண்டாம் வேற்றுமைத் தொகை. இது சந்தர்ப்பத்தைப் பொருந்தியது. அச்சந்தர்ப்பம் இரண்டாம்வேற்றுமைத் தொகைக்கு உரியதாயின் அப்பொழுது புலிக்கொன்றயானை, என வலிமிகுதல் வேண்டும். கொன்றது புலியும் இறந்தது யானையும் ஆயின், புலி எழுவாயாகு மாதலால், புலிகொன்றயானையென வலிமிகாமல் இயல்பாய்ப் புணரவேண்டும்.

இவ்விதமே, காவலாளர் கண்ட கள்வன், என்னும் வாக்கியத்தில் கண்டது காவலாளராயின், அது எழுவாய்த்தொடரும், காவலாளரைக் கண்டவன் கள்வனாயின், அதுவே இரண்டாம் வேற்றுமைத் தொகையும் ஆகும். இரண்டாம் வேற்றுமையாயின், காவலாளர்க் கண்ட கள்வன், என வல்லினம் மிகுந்து புணரும். இன்ன தன்மையில் சந்தேகம் ஒன்றும் நேரக்கூடாத இடங்களில், பொதுவிதியின்படி, இரண்டாம் வேற்றுமைத்தொகையில் வல்லினம் மிகுவதில்லை. "சீதை பெற்றவன் இவன்" என்றால், இவன் சீதைக்குத் தந்தையாகவும்இருக்கலாம் மைந்தனாகவும் இருக்கலாம். தந்தையாயின், 'சீதையைப் பெற்றவன் இவன்" என விரியுமாகையால், "சீதைபெற்றவன் இவன்" என்பது இரண்டாம்வேற்றுமைத்தொகை. ஆனால், சீதைதான் இவனைப் பெற்றாளோ என்று, எழுவாய்த் தொடர் போல் மயங்கச் செய்கின்றதாகையால், இரண்டாம் வேற்றுமைத்தொகையில்"சீதைப்பெற்றவன் இவன்" என வல்லினம்மிகுந்து புணரவேண்டும். அவ்வாறின்றி "சீதைபெற்றமகன் இவன்" என்பது வாக்கியமானால் இது எழுவாய்த்தொடரே என்பதிற் சிறிதும் சந்தேகமில்லை; ஆகையால் வல்லினம் மிகாது. அப்படியே, "சீதை பெற்றவன் ஜனகன்" என்றாலும் இரண்டாம் வேற்றுமைத் தொகையே இது என்பதிற் சிறிதும் சந்தேகம் இல்லை; ஆகையால் இங்கும் வல்லினம் மிகாது.

ஆகையால், இரண்டாம் வேற்றுமைத் தொகையாகப் பொருள்பட வேண்டிய ஒருதொடர், எழுவாய்த் தொடர்போல் பொருளை மயங்கச் செய்யுமாயின், அத்தொடரில் மாத்திரமே, பொதுவிதிக்கு மாறாக, வல்லினம் மிகும் என்பதை இச் சிறப்புவிதி குறிக்கின்றது.

கம்பராமாயணம்:—பதவுரை விளக்கம் இலக்கணக் குறிப்பு, முதலியவைகளுடன் ஸ்ரீ. வை. மு. சடகோபராமாநுஜாசாரியார், சே. கிருஷ்ணமாசாரியார், வை. மு. கோபாலகிருஷ்ணமாசாரியாரவர்களால் பதிப்பிக்கப் பெற்றவை. பால காண்டம் ரூ. 5. அயோத்தியா காண்டம் ரூ. 5. ஆரணிய காண்டம் ரூ. 4. கிஷ்கிந்தா காண்டம் ரூ. 4-8-0. சுந்தர காண்டம் ரூ. 5. யுத்த காண்டம் 2-பாகம் ரூ. 10. தபால் செலவு வேறு.

கலாநிலயம் ஆபீஸ், புரசைபாக்கம், சென்னை.



# கம்பராமாயணம்

## கிஷ்கிந்தாகாண்டம்—3. நட்புப் படலம்

[185-வது பக்கத் தொடர்ச்சி]

அனுமனு லாழியான் வாழுவா னுயினன்.

**த**ன்குலத் தலைவனுக்கு இவ்வீரரை யாரென உரைப்பதென்பதைத் தெரிந்துகொண்ட அனுமன், உவகை உகைத்த உள்ளமோடு விரைந்துசென்று "யானும் உன்குலமும் இவ்வுலகும்உய்ந்தனம்" எனுப் பாயிரம் பாடினனுய்,

மேலவன் றிருமகற் குரைசெய்தான் விரைசெய்தார்
வாலியென் றளவிலா வலியினு னுயிர்தெறக்
காலன்வந் தனனிடர்க் கடல்கடந் தனமெனு
ஆலமுண் டவனினின் றருநடம் புரிகுவான்.

[வாசனை வீசுகின்ற மாலையை அணிந்த வாலி என்னும் அளவற்றவலிமையைஉடையவனது உயிரை அழிப்பதற்கு யமன் வந்துவிட்டான். இனி நாம் துன்பக்கடலைக் கடந்துவிட்டோம், என்று சூரியனது சிறந்தபுத்திரனுகிய சுக்கிரீவனுக்குச் சொல்லிக்கொண்டே விஷத்தைஉண்ட சிவபிரானைப்போல அரிய நடனம்செய்து ஆனந்தக்கூத்தாடுவானுயினன்]

இது வெறும் குரக்குநாடகம் அன்று. அறிவும் தகவும் அளவில்பே ரமைதியும் உடைய அனுமன் கூத்தாடப் புக்கானென்றால் அவனது உவகையின் தூய்மையும் அளவும் சாலச் சிறந்த தாதல்வேண்டு மென்பதற்கையமில்லை. இன்னதோர் அனுமனைத் திருநடம் ஆட்டிவைப்பவர் கம்பரே யாதலின், அக்கூத்திற்குரிய பாட்டுக்களும் தம் ஓசையால் திருநடம் புரிகின்றன.

மண்ணுளார் விண்ணுளார் மாறுளார் வேறுளார்
எண்ணுளா ரியலுளா ரிசையுளார் திசையுளார்
கண்ணுளா ராயினர் பகையுளார் கழிநெடும்
புண்ணுளா ராருயிர்க் கமிழ்தமே போலுளார்

[பூமியில் இருப்பவர்களும் வானத்தில்இருப்பவர்களும் இவைகளுக்கு மாறான பாதாள உலகத்தில் இருப்பவர்களும் மற்ற உலகங்களில் இருப்பவர்களும், திக்குக்களில் இருப்பவர்களும்ஆகிய இவர்களது, மனத்தில் இருப்பவர்களும் செய்கையில் இருப்பவர்களும் சொல்லிலிருப்பவர்களும் கண்களில் இருப்பவர்களும் இவ் விராமலக்ஷ்மணர் ஆயினர். மேலும், பகைவர்களையுடையவர்களாய் அவர்களால்மிகப் பெரிய புண்பட்டிருப்பவர்களது அருமையான உயிரிற்கு அமிர்தத்தைப் போன்றவர்.]

இதுகாறும் அனுமன் உரைத்தவை அவன் அவ்வீரர்களைப் பற்றி அறிந்துகொண்டிருந்த மெய்ம்மையாம். இனி இலக்குவன் மரபுஉள்ளி வாய்மையாதுஞ் சோர்விலனுய்ச் சொன்னவற்றைச் சுக்கிரீவனுக்குச் சொல்கிறான். இராமனது தோற்றமாதி இராவணன் இழைத்த மாயப்புன்தொழில் இறுதியாகப் புகுந்துள பொருள்களெல்லாம் இலக்குவன் இவனுக்கு இயம்பியுளனுதலின், அனுமனும் அவர் வரலாற்றினை விரிவுற இங்கு எடுத்துரைக்க வல்லவனுகின்றான்.

சூழிமால் யானையார் தொழுகழற் றயாதன்
பாழியா லுலகெலா மொருவழிப் படரவா
ழாழியான் மைந்தர்பே ரறிவின ரழகினர்
ஊழியா லெளிதினிற் கரசுதந் துதவுவார்

[தனதுவலிமையால் உலகம்முழுவதும் தன்வழி சேரும்படி வாழ்கின்ற ஆஜ்ஞா சக்கிரமுடையவனும், முகபடாம் அணிந்த மதம்பொருந்திய யானைப்படையுடைய அரசர்கள் வந்து வணங்குகின்ற பாதங்களையுடையவனும் ஆகிய தயாதனுடைய புதல்வர்; மிக்க அறிவுடையவர்; மிக்க அழகுடையவர்; அன்னவர், முறைப்படி மிக எளிதில் உனக்கு இராச்சியத்தைக் கொடுத்து உதவிசெய்வார்]

என அனுமன், சுக்கிரீவனுக்கு இராமன்சரிதத்தைச் சொல்லத்துவக்கினன். "இராமனே துணைசெய்ய வந்துளானுதலின், நின்னை அறைகூவி அழைக்கும் சுக்கிரீவனுடன் இன்று போர்செய்ய ஏகவேண்டா" எனத் தடுத்த தன் மனைவியை நோக்கி,

ஏற்றபே ருலகெலா மெய்தி யீன்றவள்
மாற்றவ ளேவமற் றவடன் மைந்தனுக்
காற்றரு முவகையா லளித்த வைபனைப்
போற்றலை யின்னன புகலற் பாலையோ

என்றுஎடுத்துக்கூறினுதலின்வாலிக்கிவ்விடயங்கள் யாவும்தெரிந்திருந்தும், தன்னுயிர்காத்தலே கருமமாய் மலைக்குகையில் ஒளிந்துநெடுங்காலம்வாழ்ந்திருந்த அவன் தம்பிக்கும் அவனை அடுத்திருந்த அனுமனுக்கும் இவை புதுக்கதையாயிருத்தல் இயற்கையே. தயாதனை இங்கு 'வாழ்ஆழியான்' என்று அனுமன் இயம்பியது அதனினும் இயற்கையாய் நிற்கின்றது. இவ் வினைத் தொகையில் இறந்தகாலம் கரந்திருக்கின்றதென்ன வியலாது. புதல்வன் பிரிந்ததற்காற்றுமல் உயிரைநீத்துத் தயாதன் விண்ணுலகடைந்த செய்தியை இலக்குவன் அனுமனுக்குக் கூறினனல்லன்போலும். மற்று "தயாதன் அயோத்திவேந்தன்-அன்னவன் சிறுவனும் இவ்வாண்டகை தன் செல்வத்தைத் தம்பிக்கு நல்கிக் கானம் சேர்ந்தான்-அவனுக்குஅடிமைசெய் அடியன் யானே-என இலக்குவன் உரைத்துப்போந்ததனிடையே அத்தயாதன் உயிர்மாய்ந்தசெய்தி செப்பப்படாமைக்கிணங்க, அனுமன் இங்குத்தயாதனை 'வாழ்ஆழியான்' எனக் குறிக்கும் வண்ணம் அமைத்த கம்பர்பெருமானது நாடகத்திறமையின் நுட்பம் ஆழ்ந்து சிந்தித்தற்குரியது. இல்லையேல், 'வாழ் ஆழியான்' எனக்கூறியது பெரும் பிழைபோல் தோன்றும். "மன்னவன் மாய்ந்தான், நீடூழிவாழ்க மன்னவன்" (The king died, long live the king) என்னும் முரணுடை அவ்வாங்கில மரபு இந்தத் தேயத்திலும் வழங்கியதென்றெண்ண இடமில்லையாதலின், தயாதன் விண்ணடைந்த செய்தி தெரியாமையாற்றான் அனுமன் இங்ஙனம் கூறினனெனக் கொள்ளல் வேண்டும். தன் பாத்திரங்களின் அறிவிற் கேற்றபடி அவர் சொற்களின் வழுக்களையும் அமைதியுற நியமிக்கவல்ல கம்பர்தம் திறமைக்கு இச்சிறு நிகழ்ச்சி பெரியதோர் சான்றாகி நிற்கின்றது. இதற்கெதிர் கதைமுறைபற்றித் தம் காவியத்தை நிகழ்த்துகின்ற வான்மீகிமுனிவர், இயற்கையுற வாசகங்களை அமைக்கவேண்டுமே என்னும் கவலை சிறிதும் இல்லாமல் சொல்லிக்கொண்டுபோகின்ற தன்மையை இந்தச் செவ்வியிற்றானே பயனுற ஒப்புநோக்கலாம். இராமனையும் இலக்குவனையும் தன்னிரு தோள்களிலும் ஏற்றிக் கொண்டுவந்து சேர்த்த அனுமன் சுக்கிரீவனை நோக்கி,

"பெருமானே, இதோ தம்பி லக்ஷ்மணருடன் வந்திருக்கின்றாரே இவர் இராமர்; மகா புத்திமான்; உண்மையான

பராக்கிரமமுடையவர்; இக்ஷ்வாகு குலத்தில் பிறந்தவர்; தசரத சக்கரவர்த்தியின் குமாரர். எப்பொழுதும் தருமமார்க்கத்தினின்றும் தவறாதவராதலின் இவர் தந்தையின் கட்டளையைத் தம் சிரமேற் கொண்டு வனவாசம் செய்ய வந்தார் வந்த இடத்தில் இவரது மனைவியாரை இராவணன் அபகரித்துச் சென்றான். ஆதலின் இவர் உம்மைச் சரணமாக அடைந்திருக்கின்றனர். விசேஷமான தக்ஷிணைகள் கொடுத்து நூறு ஆயிரங்களாகக் கோதானம் வழங்கி இராஜசூயம் அசுவமேதம் முதலிய யாகங்களைச் செய்து தன் தவத்தின் பெருமையாலும் சத்தியத்தின் மகிமையாலும் இவ்வுலகை ஆண்ட தசரத சக்கரவர்த்தியின் குமாரராகிய இராமர் ஒரு பெண் நிமித்தமாக உம்மைத் தஞ்சமடைந்திருக்கிறார். இராம லக்ஷ்மணர்களாகிய இவ்விருசகோதரர்களும் உம்முடன் சிநேகம்செய்துகொள்ள விரும்புகின்றார்கள். பூஜிக்கத்தக்கவர்களாகிய இவ்விருவரையும் நீர் தக்கபடி மரியாதைகள் செய்து அழைத்துக் கொள்ளும்''

என்று கூறினானென வடநூல் கூறும். "சீதையைக் கவர்ந்து சென்ற அரக்கனது பேரும் யாதென அறியோம்" என்று அதனை அறிந்திருந்தும் இலக்குவன் உரைத்ததனினும் விந்தையாம், அறியாதிருந்த அனுமன் அவ்விராவணன்பெயரைச் சுக்கிரீவனுக்கு இங்கு உரைக்க நேர்ந்தது. இலக்குவன் இராவணனது பெயரை மறைத்ததற்குக் காரணங்கள்கற்பித்தஅளவுகூட இங்கு அனுமன் உரைத்ததற்குக் கற்பிக்க இயலவில்லை. அநுமனது இருதோள்களில் அமர்ந்து உகைத்தபோது இவ்விரு வீரரும் அவ்விராவணன் பெயரைத் தமக்குள்ளே ஒருகால் பேசிக்கொள்ள அன்னது அனுமன் செவியிற்பட்டதோ யாதோ! "ஏ,தம்பி, நீ இராவணன் பெயரைக் கூறாமல் எற்றக்கு மறைத்தாய்' என்று இராமன் வினவவும்,அதற்கு அத்தம்பி ஓர் காரணம் கூறுவதும் நேர்ந்திருக்கலாம்—யார் கண்டார். கதைமுறைக்கு இவ்வகை முரண்கள் அயலாகா; அன்னவைகளால் காவியத்தின் பெருமை குறைந்ததும் ஆகாது. புலவர் எதையும் மறைக்கலாம் எதையும் சொல்லலாம். அவை, பாத்திரங்களின் அறிவிற்கும் இயற்கைக்கும் நிலைமைக்கும் நிகழ்ச்சியின் நேர்மைக்கும் பொருந்தியிருத்தல் வேண்டும் என்னும் நியதியைக் கதைமுறை மேற்கொள்வதில்லை. எனினும், அக்கதையினை நாடகமாக நிகழ்த்தப்புகுந்த கம்பர், இம்முரண்கள் நேராமல் காக்கவேண்டிய கடமையுடன், 'வாழ் ஆழியான்' என்பது போன்ற சில நுண்ணிய குறிப்புக்களால் நாடகவிற்சியை மெய்ப்படுத்தவேண்டியவராகவு மிருக்கின்றார்.

வான்மீகத்தில், அனுமன் இராமலக்ஷ்மணர்களைப் பற்றிச் சொல்லிய செய்திகள் மிகச்சில வார்த்தைகளிலடங்கிவிட்டன. கம்பர் நூலில் அவ்வனுமன் கூறும் வரலாற்றின் விரிவைக் காணுங்கால், இலக்குவன் தம் சரிதம் முழுவதும் அனுமனுக்கு ஊக்கமுடன் உரைத்திருத்தல் வேண்டுமென்பது தெரிகின்றது அவ் வூக்கத்தினைத் தானும் ஏற்றுக்கொண்டு தொடர்கின்றான் அனுமன்—

நீதியார் கருணையின் னெறியினர் நெறிவயிற்
பேதியா நிலைமையா ரெவரினும் பெருமையார்
போதியா தளவிலா வுணர்வினர் புகழினர்
காதிசேய் தருகடற் கடவுள்வெம் படையினர்

[நீதியையுடையவர். அந் நீதியையும் கருணையோடு செலுத்தும் நெறியைக் கடைபிடிப்பவர். அந்தநீதிநெறியினின்று ஒருபோதும் மாறாத உறுதியுடையவர். யாவரினும் மேலான பெருமைவாய்ந்தவர். ஒருவராலும் கற்பிக்கப்படாத இயற்கை உணர்வு உடையவர். புகழ்பெற்றவர். காதியின் மைந்தனான விச்வாமித்திரனால் அளிக்கப்பட்ட கடல்போன்று மிகுந்த தெய்வத்தன்மை வாய்ந்த அஸ்திரங்களை யுடையவர்]

என அவர்தம் தன்மையைச் சொல்லியபின், செய்கைகளையும் சரிதத்தையும் சொல்லப் புகுந்தவனாயினான்--

வேலிகற் சினவுதா டகைவிளிந் துருளவிற்
கோலியக் கொடுமையாள் புதல்வனைக் கொன்று
காலியற் பொடியினா னெடியகற் படிவமா
மாலிகைக் கரியபே ருருவளித் தருளினான்

[தன்

[வேல் ஏந்திய ஆற்றலுடன் கோபித்து வந்த தாடகையானவள் இறந்து உருளும்படி வில்லை வளைத்துப் போர்செய்து, அக்கொடியவளின் மகனாகிய சுபாகுவைக்கொன்று, தன் கால்களில் பொருந்திய தூளியினால், பெரிய கல்வடிவமாய்க் கிடந்த அகலிகைக்கு அருமையும் பெருமையும் வாய்ந்த உருவத்தை யளித்து அருளினான்]

நல்லுறுப் பமையுநம் பியரின்முன் பவனயந்
தெல்லுறுப் பரியபே ரெழுசுடர்க் கடவுடன்
பல்லிறுத் தவன்வலிக் கமைதியம் பகமெனும்
வில்லிறுத் தருளினான் மிதிலைபுக் கனையநாள்

[நல்லஅவயவங்கள் அமைந்திருக்கின்ற இம் மேன்மக்களுள் மூத்தவனான அந்த இராமன்,மிதிலையை அடைந்தபோது, இருள் சிறிதேனும் இல்லாமற் செய்யும்படி மிகுந்து எழுகின்ற கிரணங்களையுடைய சூரியனது பற்களை, அவன் தக்ஷனுக்கு உதவியாய் வந்ததால் உதிர்த்தவனாகிய சிவபிரானது வலிமைக்கு ஏற்றதான திரயம்பகம் என்னும் வில்லை விரும்பி ஒடித்தருளினான்.]

உளைவயப் புரவியா னுதவவுற் றொருசொலால்
அளவில்கற் புடையசிற் றவைபணித் தருளலால்
வளையுடைப் புணரிசூழ் மகிதலத் திருவெலாம்
இளையவற் குதவியித் தலையெழுந் தருளினான்.

[பிடரிமயிர் நிறைந்த வெற்றிபொருந்திய குதிரைகளையுடைய தயரதன் அரசினைக்கொடுக்க அதனை அடைந்து பிறகு, அளவில்லாத கற்புடைய சிறியதாயான கைகேசி ஒரு சொல்லால் கட்டளை இட்டருள அதற்கு இணங்கிச் சங்குகளையுடைய சமுத்திரம் சூழ்ந்த பூமியை ஆள்கின்ற செல்வ மனைத்தையும் தம்பியாகிய பரதனுக்குக்கொடுத்து இவ்விடம் வந்தருளினான்.]

'அளவில் கற்புடையவள்' என்று அனுமன் கைகேசியைப் பாராட்டுவதினின்று,இலக்குவன் அவளைப் பற்றி யாதும் வன்சொல் வழங்காமல் அனுமனிடத்தில் பேசியிருத்தல் வேண்டுமென ஊகிப்பதற்கு இயலலாம். இதனில் அதிசயமோ யாதும் இல்லை. சீர்கொண்ட சான்றோர் சினம் நீர்கொண்ட வெப்பம்போல் தானே தணியும். மேலும், வனத்திலே தம்மைத் தேடிவந்த பரதனோடு உடனிருந்த கைகேசியின் இடரில்லா முகமுடைய எளிமையைக் கண்டபின் இலக்குவன்மனம் அவள்பக்கல் சால இரங்கியதுபோலும். அதற்கு அப்புறம் அவளை அவன் பழித்துப் பேசினானல்லன். "சூழ்ச்சியின் இமையோர் மாயையும் அவர் பெற்றுள வரம் உண்மையாதலாலுமே தேவியின் தூயசிந்தையுந் திரிந்ததென்பதை இவ்விளையவள்ளலும் உணர்ந்தவனாய் அவ்வுணர்விற்கு ஏற்றவாறே அவள் செய்கையின் தன்மையை அனுமனுக் கிவண் நயமுறநவின்றிருத்தலுங் கூடும்.



தெவ்விரா வகைநெடுஞ் சிகைவிரா மழுவினான்
அவ்விரா மனையமா வலிதொலைத் தருளினான்
இவ்விரா கவன்வெருண் டெழுவிரா வனையனும்
வெவ்விரா தனையிரா வகைதுடைத் தருளினன்.

[இந்தஇராமபிரான், பகைவர் இல்லாமலொழியும்படி, மிகுந்த சுவாலையை வீசும் மழுவாயுதத்தையுடைய அந்தப் பரசுராமனையும் மிக்கவலிதொலைத்துஅருளினவனாவான். கோபித்து எதிர்த்த இருளைப்போன்ற கொடிய விராதனை, இல்லாமற் போம்படி அழித்து அருளினான்]

இராமன் பரதனுக்கு அரசினை நல்கிவனத்திற்கேகிய செய்தியைச் சொன்னபின் அவன் பரசுராமனை அடக்கிய செய்தியைக் கூறுவது வரன்முறைப் பிறழ்ச்சியாயமைகின்றது. எனினும் நாடக நினைவினோடு நோக்குங்கால் அதற்குமோர் அமைதி தோன்றாமற்போகாது. முன்னே இதனை உணர்த்தச் சற்றுமறந்தான் அனுமன், பிறகு அதனை நினைத்தான்; பரசுராமனை அடக்கியது மாபெருஞ்செயலாதலால் அதனைவிட்டுவிட அனுமனுக்கு மனம்வரவில்லை. ஆதலின், இடம்நழுவிற்றேனும் அதனை நினைத்தவுடன் கூறிவிட்டுப் பிறகு சரிதத்தைத்தொடர்ந்துவிராதன் வதையைச்செப்புகின்றான்.

கரன்முதற் கருணையற் றவர்கடற் படையொடுஞ்
சிரமுகச் சிலைதுனித் துதவுவான் றிசையுளார்
பரமுகப் பகைதுமித் தருளுவான் பரமரா
மரன்முதற் றலைவருக் கதிசயத் திறலினான்

[கரன் முதலாகிய கருணையில்லாத அரக்கர்களுடைய கடல்போன்ற சேனைகளும் அவர்களுடையதலைகளும் சிந்தும்படி வில்லை வளைத்து உலகத்திற்கு உதவினான். மற்ற எல்லாத் திக்குக்களிலும் தன்னை அலக்ஷியம் செய்கின்ற பகைவர்களை அழித்து அருளுபவன். இவன்மேலான சிவன் முதல் தேவர்களுக்கும் அதிசயமான திறமையுடையவன்]

ஆயமா னுகர்தா மாழியா னேயலாற்
காயமா னுயினான் யாவனே காவலா
நீயமா னேர்நியா னிருதமா ரீசனார்
மாயமா னுயினான் மாயமா னுயினான்

[அந்தப் பெருமான் தேவர் தொழுகின்ற சக்கிராயுதத்தையுடைய திருமாலோ, அல்லது தன் உடலிற் பாதி பெண்ணாக இருக்கின்ற சிவபிரானோ, மற்று யாவனோ, அரசனே, நீயே அப்பெருமானைத் தரிசித்து யாரென்று தெரிந்துகொள். அன்னவன், வஞ்சனை பொருந்திய மானின் வேடத்தைப் பூண்டுவந்தமாரீசன்என்னும்அரக்கனுக்குப் பெரிய யமன் ஆயினான்]

உக்கவந் தழுமுடற் பொறைதுறந் துயர்பதம்
புக்கவந் தமுகமக் குரைசெயும் புரையவோ
திக்கவந் தரநெடுந் திரள்கரஞ் சினவுதோள்
அக்கவந் தனுநினைந் தமரர்தாழ் சவரிபோல்

[எல்லாத் திக்குக்களிலும் உள்ள உயிர்கள் அழியும்படி நீண்ட திரண்டகைகளையும் கோபித்துப்பூரிக்கிற தோள்களையும்உடைய அந்தக் கவந்தனும் இவர்களது கையால் அழிந்த முடிவும், தேவர்கள் மதித்துவணங்குகின்ற சபரியைப்போல உடலின் சுமையைவிட்டு உயர்ந்த பரமபதம் அடைந்தஅழகும், நம்போன்றவர்களால்சொல்லக்கூடிய தன்மையனவோ]

முனைவரும் பிறருமேன் முடிவரும் பகலெலாம்
இனையர்வந் துறுவரென் றியறவம் புரிகுவார்
வினையெனுஞ் சிறைதுறந் துயர்பதம் விரவினார்
எனையரென் றுரைசெய்கே னிரவிதன் சிறுவனே

சூரியன் புதல்வனே, முனிவர்களும், மற்றவர்களும், முற்காலத்திலிருந்து எல்லையில்லாத பல நாளாக, இவர் வந்து சேரவேண்டுமென்று தம்மால் இயன்ற தவங்களைச் செய்து, இவர்களைத் தரிசித்துத் தம் வினையெனும் சிறையைக்கடந்து, உயர்ந்தபதவியை அடைந்தனர். அத்தகையராகிய இந்த இராம லக்ஷ்மணர் எப்படிப்பட்டவரென்று நான் சொல்லி முடிப்பேன்]

"யாரென விளம்புகேன் நான் எங்குலத் தலைவற்கு உம்மை" என இராமனை வினவிய அனுமன்,மீண்டும், "எனையரென் றுரைசெய்கேன் இரவிதன் சிறுவனே" எனவே முடிக்கின்றான். இராமனது செய்கைகளைக் கூறினான்,அவன் தன்மைகளைக் குறிப்புணர்த்தினான், அவனைப்பற்றிய மெய்ம்மையை உரைக்கமாட்டாமையைப் பகர்ந்து முடித்தான். எனினும் இடையிடையே தானறிந்த மெய்ம்மையைச் சிறிது குறிக்காமற்செல்ல இயலவில்லை, என்பது இப்பாசுரங்களிலிருந்து தெரிகின்றது.

மாயையான் மதியிலா நிருதர்கோன் மனைவியைத்
தீயகா னெறியினுய்த் தனனவட் டேடுவார்
நீயையா தவமிழைத் துடைமையா னெடுமனந்
தூயையா வுடைமையா னுறவினைத் துணிகுவார்

[ஐயனே, புத்தியில்லாத அரக்கர்களின் தலைவனாகிய இராவணன், இராமனதுமனைவியை வஞ்சனையால் கொடிய காட்டுவழியில் எடுத்துக்கொண்டுபோனான். அவளைத்தேடுபவர்களாய் வந்த இராமலக்ஷ்மணர்கள், நீ நல்வினை செய்திருத்தலாலும் பெருமையுடைய உன்மனத்தில் தூய்மை வாய்ந்தவனா யிருத்தலாலும், உன்னோடு உறவுகொள்ள வேண்டுமென்று நிச்சயிப்பவராயினர்]

தந்திருந் தனரருட் டகைநெடும் பகைஞனும்
இந்திரன் சிறுவனுக் கிறுதியின் றிசைதரும்
புந்தியின் பெருமையாய்போதரென் றுரைசெய்தான்
மந்திரங் கெழுமுநூன் மரபுணர்ந் ததவுவான்

[புத்தியிற்சிறந்தவனே,அன்னவர் நம்மிடத்தில் கருணை வைத்திருக்கின்றனர். ஆகையால் வலிமைமிகுந்தபகைவனும்இந்திரன்புதல்வனும் ஆகிய வாலிக்குமுடிவுஇப்பொழுதே நேர்ந்துவிடும். இனிஅவர்களுடன் நட்புக்கொள்ள வருவாயாக, என்று நிறைந்த சாஸ்திரங்களின் முறைமையைஅறிந்து ஆலோசனை சொல்பவனாகிய அனுமான்கூறினான்]

எனின்,இராமனைச் சுக்கிரீவனுக்குச் சரண்புகுவிக்கின்ற வாசகம் ஒன்றும் இத் தமிழ்நூலில் அனுமன் வாய்கின்று வருவதற்கு இடமின்மையால் அவை விடப்பட்டன. அதனோடு, "ஒரு பெண்ணின் நிமித்தம் இராமன் உன்னைச் சரணமடைகின்றான்" எனவான்மீகத்தில் அனுமன் இராமனைப் பரிகசிப்பதுபோல்தோன்றும் சொற்கள் இங்கில்லாதது ஒரு குறையென்று எவரும் கருதமாட்டார்.

கலாநிலயம் முன்னைய வால்யூம்கள்

1928, 1930, 1931, 1932, 1933 வருடத்திய வால்யூம்கள் எம்மிடம் கிடைக்கும். ஆயினும் இன்னும் மிகச் சிலவே இருக்கின்றன. வேண்டுவோர் உடனே பெற்றுக்கொள்வது நலம்.

ஒவ்வொரு வால்யூமின் விலை—பைண்ட் செய்யாதது ரூ. 7-8-0. ஆப்லெதர்-இல் பைண்ட் செய்தது ரூ. 9-0-0. தபால் அல்லது ரயில் பார்ஸல் கட்டணம் வேறு.

# நம்மாழ்வார் வைபவம்

## திருவாய்மொழி

6ம் பத்து—4ம் தசகம்,

[137-வது பக்கத் தொடர்ச்சி]

9-ம் பாசுரம்.

கலக்கவேழ்கடலேழ்மலையுல
கேழுங்கழியக்கடா
யுலக்கத்தேர்கொடுசென்றமாயமு
முட்படமற்றும்பல
வலக்கையாழியிடக்கைச்சங்கமிவை
யுடைமால்வண்ணனை
மலக்குநாவுடையேற்குமாறுளதோ
விம்மண்ணின்மிசையே.

உரை:—வைதிகனது புத்திரர்களை யழைத்துவருத லின் நிமித்தம் ஆகாயத்தில் தேரைக் கண்ணபகவான் கடாவியபோழ்துஏழ்சமுத்திரங்களும்ஏழ்மலைகளும், ஏழ் உலகங்களும் இவைக ளெல்லாவற்றையும் (கலக்க) கலங்கும்படி செய்து(அதாவது இந்த ஸம்பவத் தைக் கண்ணால் கண்டவர்கள் விச்மய மடையும்படி செய்து)இவைகளெல்லாவற்றையும்(கழியச் செய்து) தாண்டி, உலக்க - முழுவதும் முடிய(அதாவது வை குண்ட மேகும்வரையிலுள்ள வெல்லா ஆச்சரியசேஷ் டிதங்களையும்இன்னமுமிதுபோல்மற்ற திவ்யசெய் கைகளையும் இயற்றி)வலதுகையில் சக்கராயுதத்தையு மிடதுகையில் சங்கத்தையு மேந்திக் கொண்டிருக்கிற நீலமேகசாமளனின ழகையும் அந்தத் திவ்விய சக்தியு ள்ளவெம்பெருமானையும்பற்றிஇவ்வாழ்வார்போலக் கவிபாடச் சக்தியுள்ளாருண்டோ வென்று அதிசயப் படும்படி அவனைத் துதிக்க நாவுடையவென்னைவிட இவ்வுலகத்தில் சதுரருண்டோ வென்கிறார்.

குறிப்பு:—முதலிரண்டடியால்,இன்னவிதமானஓர் ஆச்சரியமான திவ்வியயாத்திரையை ஓர்வைதீகனின் பிள்ளைகளினிமித்தம் செய்தவன் நம்மைப்போன்றவ ழைகளுக்குமுதவுவனோஎன்ற சங்கை சிற்சிலர்கொள் வார்கள். அவர்களுக்கும் சந்தேகம் வேண்டாமென் றே பகவான் எதிரிகளைத் தாக்கி வெற்றிகொள்ளும் சக்ராயுதத்தை வலதுகையிலும், தம்முடைய ஜயசீல ஆச்ரிதரக்ஷண ஜயகோஷஸூசகமாகச் சங்கைஇடது கையிலும் தரித்திருக்கின்றானென்று பின்னிரண்டடி களிலும்ஆழ்வார் நமக்குக்கற்பிக்கின்றாரென்றசங்கதி அறியத்தக்கது.

10-ம் பாசுரம்

மண்மிசைப்பெரும்பாரநீங்கவோர்
பாரதமாப்பெரும்போர்
பண்ணிமாயங்கள்செய்துசேனையைப்
பாழ்படநூற்றிட்டுப்போய்
விண்மிசைத்தனதாமமேபுக
மேவியசோதிதன்றாள்
நண்ணிநான்வணங்கப்பெற்றே
னெனக்கார்பிறர்நாயகரே.

பதக்குறிப்பு (1) நூற்றிட்டு - ஜபம் தவம் இவை களை இயற்றுவதைச் செய்து, அதாவது கிருஷ்ணபக வான் உலகபாரம்நீங்கப் பாரதப்பெரும்போரை ஸங் கல்பித்தாரென்று தாத்பரியம். இவ்வரும்பதம் "நோன்பு நூற்கிறான்" என்கிறதொடரில் நாளைக்கும் ஜனங்கள் உபயோகிப்பதை அறிந்துகொள்க.மந்திரம்போல் ஆவர்த்தி ஜபிக்கிறது என்று பொருள். (2) ஜோதி - தேஜஸ்மயமாய் யாவருமறிய விளங்கும் பதார்த்தம்; இங்கு,"கிருஷ்ணபகவானையே "ஜோதி" என்று குறிக் கின்றார். பூஜைக்கு அர்ஹமான விளக்குக்கு "ஜோதி" என்று நாளைக்கும் பெயருண்டு. (3) தாமம்-தேஜோ மயமாய் விளங்குமிடம் - வைகுண்டம். (4) சோதித ன்-தாள்-நண்ணி-என்று சொற்கள்பிரியும். (5)போய்- பாரதப்போரேகிருஷ்ணவதாரத்தின் உத்தேசியம்என் பதால் தாம் வந்தகாரிய முடிந்ததும் பகவான் பரந்தா மத்துக் கேகினன் என்று திருவுள்ளம்.

விசேஷக்குறிப்பு—(1) பண்ணி - பகவான் போரை உண்டாக்கி வைத்தாரென்று அருளிச்செய்கிறார். (2) மாயங்கள் செய்து - ஜயத்ரதவதத்தில் தன் சக்கராயு தத்தை உபயோகித்து ஸூரியனை, அவனைப்போன்ற ஒளியுள்ள, தன் சக்கராயுதத்தாலேயே மறைத்து உல கத்துக்கு இருட்டை விளைவித்த ஆச்சரியம். நெருப் பை அணைக்க நெருப்பையே உபயோகிப்பதுபோல் பெருமோசம் என்று தாத்பரியம். இன்னம் கர்ணனி டத்தில் அவனின் குண்டலங்களைத் தாமே கிருஷ்ண பகவான் அவனுக்கு மரணத்தினின்றும் மோக்ஷம்கொ டுக்கத் தானம் வாங்கியது மற்றொரு பெரிய மாயம். எனக் கார் நாயகர்—நாயகர் - பெரியவர், தனக்கொரு வருமில்லை. கருத்து-மேல்கண்ட குறிப்புக்களால் பாசு ரத்தி னர்த்தத்தை விளக்கியாய்விட்டது. பகவானின் திவ்விய அவதாரங்களையும் திவ்விய சேஷ்டிதங்களை யும்ஸதாஸார்வகாலமும்சிந்தித்து உகப்படைகிறேன் என்னைவிட யார் பெரியாரென்று கேட்கிறபடி.

11-ம் பாசுரம்

நாயகன்முழுவேழுலகுக்குமாய்முழுவேழுலகுந்தன்
வாயகம்புகவைத்துமிழ்ந்தவையாயவையல்லனுமாங்
கேசவனடிமிசைக்குருகூர்ச்சடகோபன்சொன்ன
தூயவாயிரத்திப்பத்தாற்பத்தராவர்துவளின்றியே.

அவதாரிகை:—ஆழ்வார் இப்பத்து முழுவதும் கிருஷ்ணவதார சரித்திரத்தையே இலக்காக வைத்துப் பிரஸ்தாபித்தார். அப்படி யிருக்க இப்முடிவுப் பாசுரத்தில் ஜகங்களை யுகப்பிரளயங்களில் (வாய்அகம் புக வைத்து)தன் வயிற்றில் வைத்து இரக்ஷித்ததை ஏன் ஞாபகத்துக்குக் கொண்டுவந்தாரெனின்,கீழ் "கல்குர வும்"என்ற 3-ம் தசகத்தில் பகவானின் திவ்விய ஆச் சரியசக்தியைப் புகழ்ந்துபாடியது ஆழ்வார்திருவுள்ள த்தில் புத்தியஸ்தமாயிருக்கிறபடியால்அதையும் சேர் த்துஅநுஸந்திக்கிறபடியென்றுகொள்ளவேண்டும்- ஜ கத் உத்பத்தியில் தாமே பகவான் விரிந்து முழுவேழு லகமாய்ச் சிருஷ்டிகளில் வெளிப்பட்டானானாலும் "அவை யல்லனுமாய் - அதாவது அவைகளின் தோஷங் கள் அவனைத்தட்டாமல் காத்துக்கொண்டவனென்று திருவுள்ளம். ஜகங்களைச்சிருஷ்டிகாலத்தில் வெளிப்ப டுத்துவதினால்ஜகங்கள் "உமிழ்ந்தவை" என்றுசொல்ல லாயிற்று—"துவளின்றியே" -யாதொரு தடங்கல் இல் லாமல் -பத்தராவர் - பரமபுருஷ சீர்பாதங்களையே பி ரயோஜனமாக நினைத்து ஆசைப்படுவார்கள். "பிறந்த வாறு" என்ற 5-ம் பத்து முடிவில் கிருஷ்ணவதார திவ்விய சேஷ்டிதங்கள் ஒவ்வொன்றையும் தாம் விசத மாய் அநுபவிக்கும் என்று விடாய்த்தவருக்குப் பக வான் அவற்றையெல்லாம் புத்தியஸ்தமாய்க் காட்டித் தரவே அவைகளை இப்பத்தில் ஒன்று ஒன்றாய்அநுப வித்து உற்சாகப்பட்டுத் தனக்கு நிகர் ஒருவருமில்லை யென்று முடித்தார். ஆச்ரிதர்களின் வேண்டுகோளுக் கிணங்கி அவர்களின் மனஸுகளை இழுத்துத் தன்னி டத்தில் அத்தியந்த பக்தியுக்தராய் ஆக்குகிறாரென்று கற்பிப்பது இத்தசகத்தின் நோக்கமென்றறிக.



# இரவொன்றிற் பல பிழைகள்

[Oliver Goldsmith's—"She Stoops to Conquer"]

அழகும் அறிவும் வாய்மையும்செறிந்த கவிகளும், நுட்பம் பொருந்திய கட்டுரைகளும், இனிமைவாய்ந்த கதைகளும், நகைச்சுவை மிகுந்த நாடகங்களும், பற்பல வரைந்து உயர்தரத்து உதயப் புலவர் வரிசையில் தனக்கு என்றும் நிலைத்ததோர் இடம் பெற்றுள்ள ஆங்கில நூலாசிரியர் ஆலிவர் கோல்ட்ஸ்மித் என்பவர் இற்றைக்கு நூற்றறுபது வருடங்களுக்குமுன் இருந்தவர். இவர் எழுதிய நூல்களின் அருமையும் அழகும் மொழியின் வளமும், செய்யுளோடு வசனங்களின் நடைநயமும் ஒருபுறமிருக்க, இவரது வாழ்நாட் சரித்திரமும் மிக்க சுவையுடையது. சூது வாது தெரியாத இவர் பேதைபோல் நடந்துகொண்டதும், உலக இயல் அறியாமல் அல்லல்களுக்கு ஆளானதும், சொல்லுக்குச் சொல் ஆயிரம் பெறவேண்டிய தகுதியுடைய வராயிருந்தும் நீங்காத வறுமையே நின்றுழன்றதும், எழுதும் வல்லமை எத்துணைதானிருந்தும், எடுத்துப் பேசுந் திறமையின்மையால், 'அசடு' என்றபேரெடுத்து நண்பர்பரிகசங்களுக்கெல்லாம் ஆளானதும், பாடத் தெரியாத புள்ளாங்குழல் ஒன்றை ஊதிக்கொண்டு நாடோடியாய்த் திரிந்தலைந்து பிழைத்ததும், பிறகு அயல் தேசம் சென்று வைத்தியப் பரீக்ஷையில் தேறியிருப்பதாகச் சொல்லிவந்து தப்பான மருந்தைக் கொடுத்து விட்டுத் தவித்ததும், இன்னோரன்ன அவர் சரித்திர நிகழ்ச்சிகளை அறிந்தவர் நம் ஆலிவர் கோல்ட்ஸ்மித்தின் நினைவை அவர் நூல்களேபோல் அருமையுடன் இதயமுறத் தழுவிக்கொள்வார்.

ஆலிவர் கோல்ட்ஸ்மித் எழுதிய நாடகங்கள் இரண்டு. அவைகளில் ஒன்றாகிய "வெல்வதற்கு வணங்குகின்றாள்" அல்லது "இரவொன்றிற் பல பிழைகள்"-(**SheStoops to Conquer or The Mistakes of a Night**)-என்னும் நாடகம் இவ்விதழ்களில் மொழிபெயர்த்து எழுதிவரப்படும். இந்நாடகம் முற்றிலும் நகைச்சுவை வாய்ந்தது. முதனூலை அழகுசெய்யும்சொன்னயத்தின் பெரும்பகுதி மொழிபெயர்ப்பில் மறைந்துபோகாமல் தடுக்க இயலாது. ஆயினும் கதையமைப்பின் சூழ்ச்சித்திறமையும், சம்பாஷணையின் சாதுர்யமும் மொழிபெயர்ப்பிலும் போதியஅளவு நின்று படிப்பவர் மனதைக் கவர்ந்துகொள்ளும் என்பதில் ஐயமில்லை. இடைவிடாச் சிரிப்பைத் தருவது இந்நாடகத்திற்கு இயற்கை. அன்றியும், ஆங்கிலேயர்தம் பழக்க வழக்கங்களையும் அறிவதற்கும் உதவும் இதுபற்றியே, முதனூலிற் கண்டபடியே பாத்திரங்களின் பெயரைத் தமிழ்ப்பெயர்களாக மாற்றாமல் நிறுத்திக்கொண்டிருக்கின்றோம். முற்றிலும் தமிழிற்கு அடங்காததும் அவசியமற்றதுமான மிகச் சில வாக்கியங்களை ஆங்காங்கு விட்டுவிடவும் சிறிது மாற்றவும் நேர்ந்திருக்கலாமாயினும், இம்மொழிபெயர்ப்பு முதனூலை உண்மை பிறழாமல் தழுவி எழுதப்பெற்றிருக்கின்றது.

அங்கம் 1. களம் 1.

இடம்:—இங்கிலாந்துநாட்டுப்புறத்தில்,ஹார்ட்காஸல் என்பவருடைய வீட்டில் ஓர் அறை.

ஹார்ட்காஸலும் அவர் மனைவி டோரதியும் வருகின்றனர்.

டோரதி:—உங்கள் வழியே ஒருவழி.தம்மேல் பிடித் திருக்கிற துருவைச் சிறிது தேய்த்துவிட்டு வருவதற் காக அப்போதைக்கப்போது பட்டினத்திற்குப் போகாத நரப்பிராணி, நம்மைத்தவிர, இந்தத் தேசம்முழுவதும் ஒன்று இருக்கிறதா? அயல்வீட்டாரைப் பாருங்கள்,எதிர்வீட்டாரைப்பாருங்கள்; ஒருமாதம் இருந்து மெருகேற்றிக்கொள்ள மழைக்காலந்தோறும் பட்டினத்திற்குப் போகிறார்களே.

ஹார்ட்காஸல்:—ஆமாம் ஆமாம், ஒருவருஷம் முழுவதற்கும் வேண்டிய இடம்பழும் தனுக்குமினுக்குங் கொண்டும் வருகிறார்கள். ஏன்தான் இந்த லண்டன் நகரம் தன் மடையர்களைத் தன் வீட்டிலேயே வைத்துக்கொள்வதில்லையோ தெரியவில்லை. என் காலத்தில், பட்டினத்து முட்டாள்தனம் நம்மிடையே மெல்லமெல்ல நகர்ந்துவந்தது. இப்பொழுது குதிரை வண்டியைவிட வேகமாகிவிட்டது.

டோரதி:—ஆஹா! உங்கள் காலம் நிரம்ப அழகுதான் போங்கள். அதைப்பற்றித்தான் எங்களுக்கு எத்தனையோ வருஷங்களாக நீள நீளச் சொல்லிக் கொண்டிருக்கிறீர்களே. கிடுகிடுஎன்று உருமுகிற இத் தப் பழைய வீட்டில் வசிக்கிறோம்நாம். இதைப்பார்த்தாலே பணத்திற்குச் சாப்பாடுபோடும் சத்திரமாதிரியிருக்கிறது; நம்மைப்பார்க்கத்தான் ஒருவரும்வருவதில்லை. பக்கத்துவீட்டுக் கிழவி ஒருத்தி, அந்த நொண்டி நட்டுவன்,இவர்களைப்போல யாராவது பேசவந்தால்தான் உண்டு. உங்கள் பழங்கதைகளைத் திருப்பித்திருப்பிக் கேட்பது தவிர எங்கள் பொழுதுபோவதற்கு வேறொன்றுமில்லை. இந்தப்பழங்குப்பையைக் கண்டால் எனக்கு வெறுப்பாக இருக்கிறது, போங்கள்.

ஹார்ட்:—எனக்கோ ஆசையாக இருக்கின்றது. பழையவைகளா யிருப்பவைகளின்மேல்தான் எனக்கு அதிக ஆசை. பழைய சிநேகிதர், பழைய காலங்கள், பழைய பழக்க வழக்கங்கள், பழைய புத்தகங்கள்—அப்புறம், டோரதி (மெல்ல அவள் கையைப் பிடித்துக்கொண்டு) பழைய மனைவியினிடத்திலும் நான் நல்ல ஆசையாக இருந்திருக்கிறேன் என்பதை நீயே ஒப்புக்கொள்வாய்.

டோரதி:—அட தெய்வமே! உங்கள் டோரதியையும் கிழமனைவிகளையும் எப்பொழுது பார்த்தாலும் பிடித்துக்கொள்ளுகிறீர்களே. நீங்கள் கிழப்பட்டுப் போகலாம், நான் ஒருபோதும் கிழவியாகமாட்டேன், நிச்சயம். நீங்கள் என்னை ஆக்கப்பார்க்கிற அத்தனை கிழவி இல்லை நான். உங்களைவிட எனக்கு ஒரு வயது அதிகம் இருக்கலாம். இருபதும் இருபதும் கூட்டுங்கள்.........

ஹார்ட்:—பார்ப்போம்...இருபதை இருபதோடு கூட்டினால், ஐம்பத்தேழுதான் ஆகிறது.

டோரதி:—போங்கள், அதுபொய். என் முதல் புருஷன் லம்ப்கின் என்பவருக்கு நான் டோனியைப் பெற்றபோது எனக்கு வயது இருபதுதான் ஆயிருந்தது. அந்த டோனிக்கோ இன்னும் புத்திதெரிகிற வயது வரவில்லை.

ஹார்ட்:—ஒருபோதும் வரப்போவதும் இல்லை. அதற்கு நான் ஜாமீன். ஆகா, எத்தனை அழகாக நீ அவனைப் படிக்கவைத்திருக்கிறாய்!

டோரதி:—அதனாலென்ன! டோனிக்கு நல்ல ஆஸ்தியிருக்கிறது. படித்துப் பிழைக்கவேண்டியவன் இல்லை என் பிள்ளை. வருஷத்திற்குப் பதினெட்டாயிரம் செலவுசெய்வதற்கு ஒரு பையன் அதிகம்படித்திருக்கவேண்டுமென்று நான் நினைக்கவில்லை.

ஹார்ட்:—என்ன சொன்னாய், படிப்பா! வெறும் குறும்பும் சூதும் கலந்துசெய்த ஒரு பிண்டம்.

டோரதி:— விளையாட்டு; விளையாட்டுத்தவிர வேறொன்றுமில்லை. ஒரு பையனிடத்தில் கொஞ்சம் விளையாட்டிருக்கப் படாதா!

ஹார்ட்:—வேலைக்காரர் செருப்பைக் கொளுத்துவதும், வேலைக்காரிகளைப் பயமுறுத்துவதும், பூனைக்குட்டிகளை அல்லல்படுத்துவதும் விளையாட்டானால், அவனிடத்தில் வேண்டியது இருக்கின்றது. நேற்றுத்தான், என் தலைமயிரை நாற்காலியின் முதுகோடு கட்டிவிட்டான்; எதற்கோ குனியப்போய் என்னுடைய வழுக்கைத்தலையை எதிரே இருந்தவர் முகத்தில் முட்டினேன்.

டோரதி:—என்மேலா தப்புச்சொல்வது? பாவம் அந்தப் பையன் எப்பொழுதும் நோயாளி. பள்ளிக்கூடத்திற்கு அனுப்பினால் உடனே செத்தான். உடம்பில் கொஞ்சம்பலம்வந்ததும் இரண்டொரு வருஷப் படிப்பு அவனை எப்படி ஆக்கிவிடுந் தெரியுமா?

ஹார்ட்:—படிப்பா அவனுக்கு! பூனைக்குட்டிக்குப் பிடில் சொல்லிவைத்தாளாம். சாராயக்கடையும் குதிரைலாயமுந்தவிர அவன் வேறு எந்தப் பள்ளிக்கூடத்திற்குப் போகப்போகிறான்.

டோரதி:-பாவம் அந்தப் பையனை ஒடுக்கப்படாது. இன்னும் எத்தனைகாலம் நம்மோடு இருக்கப்போறான்! அவன் முகத்தைப் பாரத்தாலே க்ஷயரோகம் பிடித்திருப்பது யாருக்குத் தெரியுமே.

ஹார்ட்:—நாளுக்குநாள் தடித்துக் கொழுப்பது க்ஷயரோகத்தின் குறிகளில் ஒன்றானால்—ஆம்.

டோரதி:—சிற்சிலபோது இருமுகின்றானே.

ஹார்ட்:—குடிக்கின்றசாராயம் புரையேறிவிட்டால்—ஆம்.

டோரதி:—அவன் மார்பைப் பாரத்தால் எனக்குப் பயமாயிருக்கிறது.

ஹார்ட்:—வாஸ்தவமாய், எனக்குந்தான் பயமாயிருக்கிறது. எக்காளம் போல எப்பொழுதும் ஊளையிட்டு இரைந்தால் அந்த மார்பு வெடிக்காமல் என்ன செய்யும் (திரைக்குப்பின் டோனியின் இரைச்சல் கேட்கின்றது) - ஓ இதோ வருகின்றான்.—க்ஷயரோகத்தில் கரைகிற உருவத்தை நீயே பார்.

[டோரதிக்கும் அவள் முதல் கணவனாகிய லம்ப்கின்
என்பவனுக்கும் பிறந்த பிள்ளையாகிய
டோனி வருகிறான்]

டோரதி:—டோனி, எங்கே போகிறாய், என் கண்ணே? அப்பாவோடும் என்னோடும் சற்றேனும் இருக்க மாட்டாயா, என் அன்பே?

டோனி:—எனக்கு அதிக அவசரம் அம்மா, என்னால் இருக்கமுடியாது.

டோரதி:—சில் என்ற இந்தச் சாயந்திர வேளையில் வெளியே போகப்படாதடா, கண்ணே, உன்னைப் பார்க்கும்போதெல்லாம் திகீல் எனகிறதடா.

டோனி:—என்னால் இருக்கமுடியாது, 'முப்புறு, என்னை ஒவ்வொருநிமிஷமும் எதிர்பார்த்திருக்கிறது. அங்கு ஏதோ வேடிக்கை நடக்கப்போகிறதாம்.

ஹார்ட்:—ஆம், பழைய இடம் அந்தச் சாராயக் கடைதானே; அப்படித்தான் நினைத்தேன்.

டோரதி:—மிகவும் தாழ்ந்த அற்பப் பயல்களடா, அங்கே வருபவர்.

டோனி:—அத்தனை தாழ்ந்தவரும் இல்லை. ஆயக்காரன் மக்கின்ஸ், குதிரைவைத்தியன் ஜாக் ஸ்லாங், வாத்தியப்பெட்டி சுற்றும் அமினடாப் இவர்களெல்லாம்—

டோரதி:—கண்ணே, இந்த ஒரு இரவாவது அவர்களை ஏமாற்றிவிடேன்.

டோனி:-அவர்களைஏமாற்றிவிடுவதைப்பற்றி நான் ஒன்றும் பெரியதாய் நினைக்கவில்லை. என்னையே ஏமாற்றிக்கொள்ள எனக்கெப்படி மனம்வரும்.

டோரதி:—நீ போகப்படாது. அவ்வளவுதான்.(அவனைப்பிடித்து நிறுத்திக்கொள்கிறாள்)

டோனி:—போகத்தான் போவேன்.

டோரதி:—போகப்படாது.

டோனி:—நீயா நானா, எல்லாரிலும் யார் பலசாலி என்று பார்ப்போம்.

(அவளை இழுத்துக்கொண்டு போகிறான்)

ஹார்ட்:—ஒன்றையொன்று கெடுத்துக்கொள்கிறவொரு ஜதை அதோ போகிறது. புத்தியையும் பகுத்தறிவையும் வெளியே துரத்திவிடுவதென்று இந்தக் காலமே ஒப்பந்தம் செய்துகொண்டிருக்கிறதே. அழகிய என் செல்வி காதெரின் இருக்கிறாள். இந்தக் காலத்தின் கோலமெல்லாம் அவளையும் தீண்டிவிட்டது இரண்டொரு வருஷம் பட்டினத்தில் வசித்ததால், சரிகைக்கும் சல்லாத் துணிக்கும் ஆசைப்பட அவளும் தலைப்பட்டு விட்டாள்.


## திருக்குறள் மூலமும் சொற்குறிப்பகராதியும்.

வா. மார்க்கசகாயம் செட்டியார் பதிப்பு

சிற்றடக்கமான இப்பதிப்பில் அட்டவணைக்குமாத்திரம் 300 பக்கங்கள் அளிக்கப்பட்டிருக்கின்றன. திருக்குறளைப் படித்து ஆராய விரும்புவார்க்கு இவ்வட்டவணை மிகவும் உபயோகமாயிருக்கும். ஒப்புக்குறள்களையும் தொகுத்துப் பதிப்பாசிரியர் அளித்திருப்பது மிகவும் பயனுடையதாம். பயிலப்பயில இப்பதிப்பின் பெருமையும் அருமையுந் தெரியவரும். விலை—அணா 12. தபால் செலவு வேறு.

கலாநிலயம், புரசை. சென்னை.




# மதுரைக் கோவை

[187-வது பக்கத் தொடர்ச்சி]

## XIII. பகற்குறிப் பிழைப்பு.

### பொழுதுநீட வருந்திக் கூறல்

பொன்னந் திகிரிப் பொருப்புமண் ணேழும்
புரக்கவைத்த
சொன்னந் தருமவு லிச்சொக்கர் மால்வரைத்
தோகைநல்லாய்
தன்னந் தனிக்கு மெனதாவி நின்று
தவிப்பதற்கு
மின்னந் தலைவர் வருகில ராகிலிங்
கென்செய்வதே. 173.

### தோழி கழறல்

துறக்கத் தரத்தொழு வார்மது ராபுரிச்
சொக்கர்வெற்பி
லறக்கற் பனையவ ரோகடப் பாருன்
னளவிலன்பு
சிறக்கத் தருநெஞ் சொழியநண் ணாளர்
திருவுளத்தே
மறக்கக் கொடுத்தனை யோவணங் கேயொரு
வன்னெஞ்சமே. 174.

### தலைவியோடு பாங்கி தலைவன் வந்தமைகூறல்

கார்மணி நீழற் கடம்பா டவிக்கறைக்
கண்டர்கொன்றைத்
தார்மணி மார்ப தடங்கிரி வாயிடை
சாய்த்தடங்கா
வார்மணி யார வனமுலை யாய்நம்
மவுணர்வருந்
தேர்மணி யோசைச் சிலம்புநஞ் சாரற்
சிலம்பெங்குமே. 175.

### தலைவி பொறுத்தமை கூறல்

தானுந் தனிமையு மாகியிவ் வாறொரு
தஞ்சமற்றென்
மானுந் தளர மறந்தனை யேபிறை
வாயமுதுங்
கானுங் கமழ்கொன்றை யார்கடம் பாடவிக்
கானவண்டுங்
தேனுந் தருந்தொங்க லாயிது போதுமுன்
சிந்தனையே. 176.

### வரைவுகடாதல்

வனக்கொன்றை யஞ்சடை யார்மது ரேசர்
வளைத்தசெம்பொற்
கனக்குன் றிரண்டன்ன தோளண்ண லேயுன்
கரும்பனையாள்
தனக்குங் குடிமை யழகழி யாதுங்கள்
சார்பினின்ற
வெனக்கும் பழுது படாதினி நீயெண்ணி
லெண்ணநன்றே. 177.

பகற்குறிப் பிழைப்பு முற்றும்.

## XIV. செறிப்பறி வுறுத்தல்.

### செவிலி யையந் தலைவற் குணர்த்தல்

நாவிக் கருங்குழல் வாசங்கண் டோவல்லி
நாணயனக்
காவிக் கடையின் விரகுகண் டோகஞ்ச
யோனிமுதல்
சேவிக்கு நாதர் திருவால வாயர்
சிலம்பிலினி
மேவித் தனிவிளை யாடலென் றாளன்னை
வேலவனே. 178

### தினைவிளைந்தமை கூறல்

மாலாற் புரப்பதை மாற்றிவிண் ணேழுமண்
ணேழுமொரு
கோலாற் றனிபுரப் பார்சொக்க நாயகர்
கூடலிளஞ்
சூலாய்ப் பசுங்கதி ராயண்ண லேகுரல்
தூங்கியநீ
காலாய்க் கிடக்கவுங் காலங்கண் டாயெங்
கருந்தினையே. 179.

### களவொழுக்கத்தை வேங்கை நீக்கிற்றெனத் தோழி தலைவற் குரைத்தல்

குழைபூட் டியகுறுங் கட்செவி யார்தமிழ்க்
கூடல்வெற்பை
விழைபூட் டியதிருத் தோளண்ண லேகொலை
வேங்கைவந்து
மழைபூட் டியகொடுங் கண்ணியு மாக
வளைந்துகொண்டா
லிழைபூட் டியகன்று மாவெங்ங [னே]யிங்
கிடைநிற்பதே. 180.

### சிறைப்புறமாகத் தலைவி யிரங்கல்

தாங்கத் தலைதளருங்குலை வாழையின்
றாறுசெந்நெல்
தூங்கத் தலைமணக் குங்கூடல் நாயகர்
சொக்கர்வெற்பில்
வேங்கைக் கொளுஞ்சிலை நீமுகை யாகயின்
வெற்பரெம்மை
நீங்கப் பருவமு மாயல ராகி
நிறைவதற்கே. 181.

### தோழி சிறைப்புறமாக வருந்திக்கூறல்.

உணங்கிச் சருகு படுந்தழை யாகினு
மோலவண்டு
மணங்கிச் சுழலுமிச் சந்தனச் சோலையி
ணங்கசுரர்
வணங்கிச் சரணம் புகுமது ரேசர்
மலையவெற்பி
லிணங்கப் பிரியு மனமெமக் காகு
மிளங்கொடியே. 182.

### தினைகொய்தமை கூறிவருந்தல்

னையுஞ் சிறுமருங் கிற்றிருப் பாவையு
நானுமன்றே

கொய்யுந் தினையென் றறிக்நில மேயிளங்
கூன்பிறையு
மையுந் தவழு மதில்மது ரேசர்
வரையினில்நான்
செய்யும் பரிசெது வோவிது வோமுன்செய்
தீவினையே. 183.

புணர்வீட் டகல்வோர் புலம்பிக் கூறல்

கோடும் பிறைமவு லிச்சொக்க நாயகர்
கூடல்வெற்பி
னீடுந் தனிநெஞ்சு நின்றரு காமல்முன்
னின்றதினை
தேடும் பசுங்கிளி காளைமைத் தேடித்
திகைத்துநொந்து
வாடும் புரவலற் குத்துணை யாக
வரவிடுமே. 184.

இறைவனிலைக் கிரங்கல்

அனமென் சொலுங்கிள்ளை யென்சொலு மோவது
வன்றிநவ்வி
யினமென்[1] சொலும்பிக னென்சொலு மோபுன
லேற்றிருண்ட
கனமென் களத்தா ரைர்கடம் பாடவிக்
காவுடுத்த
புனமென் சொலுமறி யேன்வந்து வாடும்
பரவலற்கே. 185.

தலைவற் கிடங்கூறிற்றில மெனவருந்தல்

ஈன்னேநங் கேள்வற் கிடமுஞ்செல் காலமு
மின்னதென்று
முன்னே யறிய மொழிந்தில மேசங்க
முத்தமிழுந்
சொன்னே யமுதங் கெரிசொக்கர் கூடலிற்
றேபவரு

மன்னோ ரும்வெற் றிதனுங்கண் டாலெங்க
ளூதவரே. 186.

வறும்புனந் தழுங்கல்

மருவிற் பொலிகொன்றை போலமண் ணேழு
மதுரையுந்த
மிருபொற்[1] புயம்பரி பார்சொக்க நாத
ரியல்வளர்க்கு
மருவிச் சிலம்பு மிதனும்பொன் னாசனு
மாயிருந்துந்
திருவைப் புறந்தந்த தாமரை போலுந்
தினைப்புனமே. 187.

மனமழிந்திரங்கல்

அலையுந் திருநதி யுஞ்சந்த்ர ரேகையு
மாடரவு
மிலையுஞ் சடைமுடி வெள்ளிமன் றுளர்
வியன்சிலம்பில்
வலையுங் கணியுமில் லாமலென் னேயொரு
மானுமெண்ணெண்
கலையும் கவர்ந்தன ரோவஞ்ச ரோசிலைக்
கானவரே. 188.

பதிநோக்கி வருந்தல்

வானு டருமறி யாமது ரேசரை
வந்திறைஞ்சா
தானுடும் பேரின்ப வீடல்ல வோசந்
ததமுமொரு
வேனுக நின்று மறுகியுள் ளாசைகொண்
டடழிந்து
தேனுர் குதலையின் சொல்லிசிற் றார்செலச்
சிந்திப்பதே. 189.

(பி - ம்)—1. சொலும்பிக.

(பி - ம்)—1. பரமபுயப்.

சேறிப்பறிவுறுத்தல் முற்றும்

# சூளாமணி

[186-வது பக்கத் தொடர்ச்சி]

இவ் வரசனது அடி நிழலோ, தன்கீழ் வணங்கி நிற்கும் அரசர்களைப் பகை முதலியவாய பலவகையாம் கேடுகள் என்ற வெப்பத்தினின்று காத்தருள்கிறது. மணிகள் நிறைந்து ஒளி வீசும் அழகிய திருமுடியின் நிழலொளியோ, மேலாம் முனிவருடைய திருவடியிலே மூழ்கி ஒன்றாய் மிளிர்கிறது. அருளாளரை அடைந்ததன் பயனாக இவனும் அருளொழுக்கத்தில் நிலைநிற்கின்றபடியைக் குடைநிழலில் காணலாம். அரசநெறிபிறழின் மன்னவன் தன்னைத்தானே கொன்றுகொள வேண்டிக் கூரியதாகச் செய்து, தீட்டப்பெற்று ஒளிரும் வேல், பிறர்மேல் எறிவதற்கன்றி அரசகுறியாகக் கையிலே நிற்றலின் அதற்கேற்ப ஒப்பனைப் பொருளாக மணிகள்நிறைய வனையப்பெற்று, அம்மணிகள் மின்ன மிளிரும் வேலொடு, தன்னையும் அழியமாறிப் பிறர்க்கருளும் ஒருதனிப்பேரரசனைத் தவவழியிலே மன்னி நிற்கின்றான். ஆதலின் இத்தகையானே மன்னனாவான். குடைஎனப்படுவது பயாபதி குடையே எனச் சிறப்பித்து ஒரடையும் இன்றியே, உலகினரால் போற்றி வழங்கப்பெற்ற குடையே இவனைச் சிறப்பிக்கின்றது. வேல் இவனால் சிறப்புப்பெற இவன் சிறப்புப்பெறுவது குடையாலே என்பது தோன்ற வேலை முன்னும் குடையைப் பின்னும் அமைத்தமை காண்க. இக்குடையின் அருட்காவலாம் குளிர் நிழலில் உலகனைத்தும் தம் புறவெப்பமும் அகவெப்பமும் (முன்னே கூறியிருக்கின்றபடி) நீங்கி விளங்குமாதலால் அழியா உயிர்போல அவனுக்கு உயிராகி நிலைநிற்கின்றது. நிலைநிற்றல் உயிர்க்கேயன்றோ இயல்பு. உலகிற்கு உயிர் என முன் பயாபதி அரசனைக் கூறின தோலாமொழித்தேவர் உலகம் நிலைபெறுதலை இவ்வாறு கூறி அவ் வுலகின்மேலே உயிர்ப்பண்பை ஏற்றி வைத்துள்ளார். "உலகிற் குயிர்" என்பதற்கு உலகிற்கு அம்மன்னவன் உடம்பாய் நின்றான் என்றும் பொருள்கொள்ளக் கூடுமன்றே. தன்னுயிர்போல மன்னுயிரைக் காத்தான் என்றபோது தன் னுயிரோடு கூடிய உடம்பிற்குத் தீங்கு நேரிடாமற் காத்தல்போல மன்னுயிர்களின் உயிருடலிற்கும் தீங்கு நேரிடாமற் காத்தான் என்பதே பொருளாகும். அழியா நிலைமைத்தாகிய உயிரை வேறு வகையாற் காத்தல் எங்ஙனம்



கூடும்? "பாரதத்தில்" அளவில் பேரொளிப் பகவனுருத்திரற் கச்சுத னன்மாவாம்" எனச் சிவனுக்கு விண்டு ஆன்மா என்றது அபேதம் என்னும் பொருள்பட உபசரித்துக் கூறியது. சரீரம் என்னும் பொருட்டு எனினும் அமையும்" எனவரும் சிவஞான சுவாமிகளின் சிவஞானபோதப் பேருரையினையும் காண்க. இவ்வாறு உயிர் என்பதற்கு உடம்பெனப் பொருள் கொளக்கிடத்தலின் அன்றோ கம்பன் தயரதனை உடம்பெனக் கூறினான் என்க. அன்றியும், உலகம் நின்றது என முடிபுகொள்ளாது, உலகம் குளிர, நிழல் நின்றது எனக்கொண்டு, உலகம் வாழக் குடைவடிவாம் அருளாட்சியும் நிலைபெற்றது எனக் கொள்ளினும், சிவஞான முனிவர் காட்டியபடி, "அபேதம்" எனும் ஒற்றுமைப்பொருளை இது நன்குவிளக்கும். உலகும் அவனும் ஒன்றாய் நின்றபடி யீது. மக்கட்கு என்றும் பகைமையாய்நிலைத்தலேஇயல்பாகக்கொண்ட அவா, வெகுளி, இவறன்மை, மயக்கம், செருக்கு, பொறாமை என ஒன்றினொன்று பெருகிப் பெருங்கூட்டமாய் எதிர்க்கும் அறுவகைப் பகையையும் வென்று மனந்தூயனாய் அருள்வழி நின்றவனாதலின் தன்னைத்தான் காத்தலும் வல்லவனாயினான் என, இதனைப் புதுமைஎன்றோ பெருமையென்றோ சிறுமைஎன்றோ ஆக்கம்என்றோகொண்டு வியக்கவேண்டுமோ? இதனை நிலைபெற்றதோர் இயல்பாகவே கொண்டு விளங்கும் பழையதொரு மன்னவனன்றோ இவன்.

நல்லவும்தீயவு மானவற்றிற்கு வைப்பிடமாய்இருத்தலினால் வையகம் என உலகம் பெயர்பெற்றமையால் பகையும் இங்கே உளவாகலாம் என எண்ணினலோ, அவ்வாறு உலகின்கண் பொருந்தியவையாய் வளரு[illegible] பகை எண்ணிக்கைக்கும் இவ் வரசாட்சியில் [illegible]ப்படுவதில்லை. பகை தேய்ந்து நட்பு ஆவதன்றிப் பகையாக வளர்வதில்லை. பகைத்து நின்றார் பகைத்தபோதும் அவன் நெறி நிற்றலினால் ஒருவரோடொருவர் கூடிபெழ இடம் ஏற்படுவதில்லை.மனத்திலே கனவுலகில் பொருந்துவதன்றி வெளிப்பட்டு நனவுலகில் அப்பகை பொருந்துவதில்லை. இவற்றை இல்லையாக்கினான் எனாது எப்போதும் இருந்ததில்லைஎன "இன்மையால்" எனக்கூறும்படி இருக்கின்றது அவ்வாட்சி. விலங்கோ, மக்களோ, பகையாய் வருதல் இல்லையாதலின் தரையிலுள்ள உயிர்களை இவன் காப்பதுவியப்போ? ஓரறிவுயிரும் தீங்குசெய்யாதபடி உலகை யாள்வது அருளாளர் தமது தவப்பேறாவழியாம் அன்புநெறியிலே நின்றார்க்கல்லது பிறர்க்கு இயல்வதொன்றோ? இதுபற்றியே, இவ்வாறு இப் பொருட்களைத் தொடர்புபடுத்திக் கூறுகின்றார் தோலாமொழித்தேவர்.

இயற்கையறிவு இயல்பு முதலியவற்றால் மேம்பட்டோராய், உண்மையை விரித்துரைக்கும்தன்மையால் பிறநூல்களுக்கு இல்லாத சீர்மைநிறைந்த நூல்களைக் கற்று அவற்றின்படி ஒழுகிப் பெருமை பெற்றவர்களையே தன்னுடைய உள்ளத்தும் ஊடுருவி உடனுறையவும் உடனிலைக்கூட்டத்திற்குஅமைந்த சுற்றத்தாராகவே கொண்டு விளங்குகின்றான் இவ்வரசன். அவ்வறிஞரினும் சிறந்து நிற்கின்றமையால், நீரிடை யாடும் அன்னங்களினிடையே அரசவன்னமேபோலஇவன் விளங்குகிறான். "கள்ளலைத்த கவுட் கருமேதி பாலுள்ளலைத் தொழுகக் குடைந் துண்டலாற் புள்ளலைத்த புனல்" என்று முன்கூறிய விடத்தே நீரினின்றும் பாலைப் பிரித்து உண்ணும் அன்னமேபோல இவனும் இவனைச் சூழ்ந்தாரும் 'எப்பொருள் எத்தன்மைத்தாயினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு" என்றமெய்யுணர்வின்வழியே அரசியலில்நிற்பாராதலின் "எப்பொருள் யார்யார் வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு" என்று பொருட்பாலிற் கூறிய அறிவு பெற்றமை கூறவேண்டாவே. இவர்களுடைய அரசியல் வாழ்க்கை அன்னத்தின் நீர்விளையாட்டைப்போல இன்பத்திற்குப்போக்குவீடாயன்றோ அமைகின்றது. இவ்வாறு இருக்குமானால் இவ்வுலகும் என்று மில்லாததும் எங்கு மில்லாததுமாய சிறப்புப்பெற்று இவனொருவனுக்கே உரிமையாதலைச் சொல்லவேண்டுமோ! நீரிடையாழ்வார் ஆழ,ஆழாது உயரப் பறந்துசெல்லும் அன்னத்தைப் போல மற்றைய அரசர் மயங்கி அரசியலில் சிக்கிச் சாவஇவன் இனிதே அரசுநடாத்தியபடிஇதுவாகும். ஈதே அவ் வரசாட்சியின் நுட்பம் என்க.

ஆயுர்வேத வித்வான் B. V. பண்டிட்ஸ் நஞ்சன்கூடு "சத்வைத்யசாலை" மருந்துகள்
"ஆல்மண்டைன்" (டானிக்). "பாலக்ஸ்" பேதிமாத்திரை. "ஸ்ப்ளிவரால்" (குழந்தை கட்டிக்கு)
சுமார் 300 போலிகள் ஏமாற்றும்.
I.D.L.ச்யாவனப்ராசா I.D.L.பிருங்காமலகதைலம் கோரோஜனை மாத்திரை
நஞ்சன்கூடு பல்பொடி
சாதாரணம்-பாக்கேட் I.D.L.மெடிகேடட்-டப்பி
தயவுசெய்து கவனித்து வாங்கவும்.
I.D.L.ச்யாவனப்ராச சிறந்த டானிக் சத்வைத்யசாலை - நஞ்சன்கூடு
காஸ்ட்ராலகஸ்
ஜவரேக்
[பஸ்மங்கள் வைத்தியர்களுக்கு மட்டும்] [அட்வான்ஸுடன் ஆர்டர் செய்யவும்.]

எமாங்கதத் திளவரசன்
ஸ்ரீமான் T. N. சேஷாசல ஐயர் B.A., B.L.,
எழுதியவோர்
செந்தமிழ்க்காதை.
கலா நிலயம், வேளாளர் வீதி, புரசைபாக்கம், சென்னை. விலை ரூ.

KALANILAYAM
REG. NO. M. 2324.

# வர்த்தமானம்

முசோலினி நீதி:—இத்தாலிக்குச்சென்றிருந்த இங்கிலாந்து ஸ்திரீ ஒருத்தி உரோமாபுரியில் 35 பவுனுக்கு ஒரு கடிகாரத்தை வாங்கினாள். அதனை வாங்கியதில் பெருமை கொண்ட அந்த ஸ்திரீ, அதை இன்ஷியூர் செய்வதற்கு முன் லண்டன் கடைக்காரர் ஒருவரிடம் அதைக்காட்டிப் பெருமையாகப் பேசினாள். அதைக் கண்ட கடைக்காரன் அக் கடிகாரம் ஒரே பவுன்தான் பெறுமென்றும் 34 பவுன் நஷ்டமென்றும், அவள் ஏமாந்து வாங்கிவிட்டதாகவும் கூறினான். உடனே அந்த ஸ்திரீ கோபங்கொண்டு, வீட்டுக் கோடி இத்தலிநாட்டுச் சர்வாதிகாரியான சினோர் முஸோலினிக்குக் கடிதமொன்றெழுதினாள். அவள் கடிதமெழுதிய இரண்டு வாரங்களுக்குள், அவ்வாறு நிகழ்ந்துவிட்டதற்கு மன்னிப்புக் கோரி, ஒருவன் இவ்வாறு செய்துவிட்டதால் இத்தாலியர்கள் அனைவருமே கெட்டவர்களென்று எண்ணிவிடக் கூடாதென்று கேட்டுக்கொண்டு 34 பவுனுக்குத்தம் சொந்த செக்வைத்துச் சினோர் முஸோலினி அந்தஸ்திரீக்கு ஒரு கடிதம் எழுதினார். மற்றும் இரண்டு வாரங்கள் கழிந்த பின் அந்த ஸ்திரீக்கு இத்தாலியிலிருந்து மற்றுமொரு கடிதம் வந்தது. ஆனால், அந்தக் கடிதம் அவளுக்குக் கடிகாரம் விற்றவனிடமிருந்து வந்திருந்தது. அதில் அவன் பின்வருமாறு எழுதியிருந்தான். 'சர்க்கார் என் கடையை மூடிவிட்டதுடன், எனக்கு அபராதம் போட்டு, என்னை, 6-மாதம்வரை சிறைக்கனுப்பவும் தயாராய் இருந்துகொண்டிருக்கின்றது. தாங்கள் இதில் தலையிட்டால் சிறைக்குப் போகாவண்ணம் நான் தப்புவேன்." இக்கடிதத்தைக் கண்ட அந்த ஸ்திரீ அவனுக்கு உதவிசெய்ய விரும்பாமல் பேசாமல் இருந்துவிட்டாள்.

பத்திரிகை பரவிய விதம்:—"கத்தோலிக் ஓர்க்கர்" என்ற பத்திரிகையின் சந்தாதார் ஒருவருக்கு, அப்பத்திரிகையில் இரண்டு பிரதிகள் ஒரு சமயம் தடுமாறி அனுப்பப்பட்டுப் போயின. அதை அவர் என்ன செய்வதென்றுயோசித்துப் பின் தனக்கு அறிமுகமாயிருந்த விக்கி என்னும் ஒரு பாதிரியாருக்கு அனுப்பி வைத்தார். சில மாதங்கழித்து ஒரு கூட்டத்தில் ஷெ பத்திராதிபரைச் சந்தித்தபோது தான் பத்திரிகைப் பிரதியை விக்கி பாதிரியாருக்கு அனுப்பின விபரத்தைக் கூறி அவரிடமிருந்து ஏதேனும் கடிதம் வந்ததாவெனக் கேட்டார். அதற்கு அப்பத்திரிகை அதிபர் கீழ்க்கண்டபதிலைக்கூறினார்:—"விக்கி பாதிரியார் தனக்கு மாதம் ஒன்றுக்கு 100 பிரதி அனுப்பிவரும்படி உத்திரவு செய்திருக்கிறார். அவர் அப்பத்திரிகையைப் பற்றி வேறு நாலு பாதிரியார்களுக்குச் சிபார்சு செய்திருந்தார். அதன்பேரில் அவர்களில் ஒவ்வொருவரும் தங்கள் தங்களுக்கு மாதம் ஒன்றுக்கு முறையே 100 பிரதிகள் அனுப்பிவரும்படி உத்திரவு கொடுத்திருக்கின்றார்கள். அப்பத்திரிகைப் பிரதிகள் யாவும் அவர்களுடைய ஆதிக்கத்திற்குட்பட்ட சிறு பட்டணங்களிலுள்ள பற்பல தொழிலாளர்களுக்கும் விநியோகிக்கப்பட்டுவருகின்றன. இவ்விதமாக ஒருவர் ஒரு பிரதியை ஒருவருக்கு அனுப்பியதின் பலனாக 500 பிரதிகள் வியாபிக்க ஆரம்பித்துவிட்டன. முதன் முதலாக அந்த ஒரு பிரதியை அனுப்பிவைத்த தங்களுடைய அன்பான சிரத்தைக்கு வந்தனம் செய்கிறேன். நமது பத்திரிகையைப் பரப்பி வைத்த விக்கி பாதிரியார் அன்புக்கும் எமது வந்தனம். அன்பர்களின் இத்தகைய முயற்சிகளினாலேயே எங்களுடைய பத்திரிகை சந்தாதார்களின் எண்ணிக்கை 2500 இல். இருந்து 30,000க்கு உயர்ந்திருக்கிறது. இதுமேனாட்டுக் கதை.

*       *       *

வான யாத்திரையின் பயன்:—அமெரிக்காவில் செயிண்ட் லூயிஸ் என்னுமிடத்தில் வசித்துவருகிற ஸ்ரீமதி வீரா ஹாப்கின்ஸ் என்பவருக்குத் திடீரென ஒருவித வலிப்பு ஏற்பட்டது. இதனால் அவரால் பேச முடியவில்லை. கண் குருடாகி விட்டது. காது செவிடானது. சுமார் 6 தினங்களுக்குப் பின் இவரைக் குணப்படுத்த ஒரு டாக்டர் ஒரு தந்திரஞ் செய்தார். அப் பெண்ணை ஒரு விமானத்தில் ஏற்றி ஆகாயத்தில் பறந்து சென்றார்கள். திடீரென விமானத்தைத் தலை கீழாக அதிவேகமாக ஓட்டினார்கள். விமானத்திலிருந்த பெண் திடுக்கிட்டு ஓலமிட்டாள். உடனே அவள் கண்கள் திறந்தன. கண் பார்வை வந்தது. பேசினாள். காதும் நன்கு கேட்டது. அப்பெண் பூர்ண குணமடைந்திருக்கிறாள்.

NATIONAL
INSURANCE COMPANY, LIMITED.
Head Office:
NATIONAL INSURANCE BUILDING,
362, China Bazar Rd, Esplanade, Madras.

1933 Results.
New Business Completed
exceeds ... ... Rs. 1,67,00,000
The Company with a steady progress all round.
All forms of life assurance policies issued at low safe rates of premium.

Specialities.
Female Lives
Joint Lives
Permanent Protection Policies
Triple Benefit Policies.
Marriage & Future Provision Policies.

For agencies please apply to:—
T. ANANTACHARI, Branch Secretary, 362, China Bazar Road, Esplanade, Madras.
OR
R. G. DAS & Co., Managers.

Consult
NATIONAL FIRE
AND
GENERAL INSURANCE COMPANY Ltd.,
Head Office:—
NATIONAL INSURANCE BUILDING,
362, China Bazar Rd, Esplanade, Madras.
for Fire, Motor & Accident policies.

A sound Company.
Please apply for particulars to:—
T. ANANTACHARI, Branch Secretary, 362, China Bazar Road, Esplanade, Madras.
OR
R. G. DAS & Co., Managers.

இந்தியா தேசத்து இணையற்ற இரத்தினம்
ஆதங்க நிக்ரஹ மாத்திரைகள்
தேக பலத்தையும், இரத்த விருத்தியையும், ஞாபக சக்தியையும், தாது புஷ்டியையும் கொடுப்பதில் நிகரற்ற ஔஷதம். சென்ற 53 வருஷங்களாக இலட்சக்கணக்கான ஜனங்களால் உபயோகிக்கப்பட்டு வருகின்றன.
32 மாத்திரைகளடங்கிய டப்பி 1-க்கு விலை ரூ. 1
இனாம்! இனாம்!!
"இன்பவாழ்க்கையாலடைந்த சக்தி"
இனாமாகவும் தபாற்செலவில்லாமலும் அனுப்பப்படும்.
ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,
26 பிராட்வே, மதராஸ்.

Printed at the R. N. Press. Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L., (Editor)